புதுவாழ்வு

ஓ. எம். சுப்பிரமணியன்

ஆசிரியர்:—
க. அன்பழகன், எம். ஏ.

பாரதிதாசன்

குயில்

புரட்சிக்கவிஞரின் புதுமைக்கருத்துக்களை

புத்துணர்வு ஊட்டும்

கவிதைகள் வடிவில்

திங்கள் தோறும் இசைக்கிறது.

விலை அணா ஆறு.

பாரதிதாசன் பதிப்பகம்

நெ. 95, பெருமாள் கோயில் தெரு.

புதுவை.

விரைவில் வெளிவருகிறது!

சமதர்மம்

அறிஞர் சி. என். அண்ணாதுரை

அவர்களின்

வானொலி சொற்பொழிவு

விபரங்கட்கு:—நிர்வாகி,

திராவிடன் பதிப்பகம்

தபால் பெட்டி எண் 18, வேலூர் (வ.ஆ.)

தங்களிடம் இல்லையா?

அப்படியானால்

ரூ. 5. M.O. அனுப்புங்கள்

(தபால் செலவின்றி அனுப்புகிறோம்)

	ரூ.	அ.
1. நாத்திகர் யார்? ஆத்திகம் எது?	0	6
2. திராவிடர் நாகரிகம்	0	10
3. பெண்கள் உலகம் அன்றும்-இன்றும்	0	12
4. மனிதன் எப்படித் தோன்றினான்	0	8
5. கவிஞர் விழா ஆறு ஓரங்க நாடகங்கள்	0	6
6. தமிழ்க் கடவுளுக்கு ஆரியப் பாடலா?	0	4
7. தமிழரின் மறுமலர்ச்சி (C. N. A.)	0	8
8. எது இசை? (பாரதிதாசன்)	0	6
9. முச்சங்கம்	0	8
10. பாம்பு வணக்கம்	0	4
11. சிந்துவெளித் தமிழர்	0	8

முத்தமிழ் நிலையம்

பீட் எண் 14., சென்னை-1.

புதுவாழ்வு

மாலை 1 | திருவள்ளுவர் ஆண்டு 1979 மாசி 1. | மலர் 2

ஆசிரியர் :—க. அன்பழகன் எம். ஏ.,

துணை ஆசிரியர்:—கே. ஜி. இராதாமணாளன்.

உள்ளுறை

வாழ்த்துக்கள்	...	2
இமயம் சரிந்தது!	...	4
சாந்திக் கொலை வேண்டாம்!	...	9
தலைவர்கள் துயரம்	...	11
உலகினரின் புகழ் மாலை	...	13
உன்னாலும் ஆகும்	...	17
ஒலிக்கும் சிலம்பு	...	23
உறைந்த இரத்தம்	..	28
சிறுவனும் காக்கையும்	..	34
உரை கல்	..	36

10, வேளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை - 7.

விலை அணா 4

15-பிப்ரவரி
1948.

தலைவர் பெரியார் வாழ்த்து.

தங்களின் 'புதுவாழ்வு' என்ற மாத வெளியீடு நம் நாட்டு மக்களின் நேர்மையான வாழ்வுக்கு வழிகாட்டியாய் இருந்து, நீண்ட நாள் நிலவிப் பணிபுரியவேண்டுமென ஆசைப் படுகிறேன்.

ஈ. வே. இராமசாமி.

கலைவாணர் வாழ்த்து.

புதுவாழ்வளிக்கும் பொங்கலன்று வெளிவந்த தங்கள் 'புது வாழ்வு'க்கு எனது மன முவந்த வாழ்த்தை நல்குவதோடு 'புது வாழ்வு' எல்லா நலன்களும் இனிது பெற்று வளர்ந்தோங்கி நாட்டுக்குப் புதுவாழ்வும் புது ஒளியும் நல்க வேண்டுமென்று மனப் பூர்வமாக ஆசைப்படுகிறேன்.

என். எஸ். கிருஷ்ணன்.



மோகன் தாஸ் கரம் சந்த் காந்தி கத்தியவாரிலுள்ள போர்பந்தர் என்ற இடத்தில் 1869-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் நாள் பிறந்தார். 78-ஆண்டுகள் வாழ்ந்தார்.

புதிய டில்லியில் 1948-ஜனவரி 30-ம் நாள் மாலை-வழிபாட்டுக் கூட்டத்தை அடையும்போது, நாதுராம் விநாயக் கோட்ஸே, என்ற பெயருடைய 36-வயதினனான, மராத்தி இந்து பார்ப்பனனால் சுடப்பட்டு இறந்தார்.

புதுவாழ்வு

இமயம் சரிந்தது!

இந்தியாவின் இணையற்ற தலைவர், விடுதலை வீரர், தமது வாழ்நாளையே போதுத் தொண்டில் கழித்த தியாகி, இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கென உழைத்த பெருந்தகை, உலகம் போற்றும் உத்தமர், மோகனதாஸ் கரம்சந்த் காந்தி அவர்கள், 30-1-43 வெள்ளிக்கிழமைமாலை 5-30மணிக்குத் தலைநகரமான டில்லியிலேயே, வழக்கமாக நடத்தும் வழிபாட்டுக் கூட்டத்திற்குப் போய்ச் சேரும் வேளையில் வெறியன் ஒருவனால் ஒருமுறைமட்டுமல்ல-மும்முறை சுடப்பட்டு, மார்பிலும் வயிற்றிலும் குண்டுகள் பாய, குருதி கொட்டச் சுருண்டு விழுந்து, பின்னும் சில நிமிடங்களில் உயிர் துறந்தார் என்ற செய்திகேட்டுத் திடுக்கிட்டோம், துயருற்றோம்.

முதலிலேயே திட்டமிட்டிருந்த ஒரு தீயோனால், கொலைக்கஞ்சா கொடியோனால், இரக்கமற்ற நெஞ்சினனால், விலங்கினத்தின் பிரதிநிதியால், அவரது உயிர் போக்கப்பட்டுள்ளது. ஒரு தனி மனிதனின் உயிரைப் போக்குவதே எண்ண முடியாத கொடுமையாய் இருக்க, ஒரு துணைக் கண்டத்தின் விளக்கை, ஒரு சமுதாயத்தின் உயிரை, ஒருநாட்டவரின் நம்பிக்கையை, உலகிடை உலவிய ஒளியை அணையச் செய்த கொடுஞ் செயலைச் சொற்களால் விளக்குவது இயலாது.

கொலைச் செயல் கண்டுபிடிக்கப்பட்டால் என்னாகும் என்ற கவலையின்றி, பலமக்களுக்கிடையிலே உள்ள ஒருவரைத் தாக்குகிறோமே அவர்கள் என்ன மரக்கட்டைகளா என்பதையும் கருதாமல், விடுதலை வாங்கித் தந்தவர் என்று மக்களால் கொண்டாடப் படுபவரைக் கொல்வதென்றால் மக்கள் உள்ளம் என்ன பாடு படுமோ என்பதையும் மதியாமல், உலகமே மதிக்கும் ஒருவரைக் கொல்ல நினைப்பதேகூட கொடுமை என்பதையும் உணராமல், இத்தகைய பாதகச் செயல், தன்னை மட்டுமின்றி, தான் சார்ந்துள்ள கூட்டத்தையும், கட்சியையும், தான் பிறந்துள்ள சமுதாயத்தையும் நாட்டையும் எவ்வளவு பெரிய பழிக்கும், இழிவுக்கும், வெறுப்புக்கும் ஆளாக்கும் என்பதையும் கருதாமல், இவற்றிற்கு அஞ்சாமல் நடந்துகொண்ட இவனது இழிசெயல் நம்மை நடுங்கச் செய்கிறது.

அஞ்சவேண்டியவற்றிற்கு அஞ்சாத, பழிக்குப் பயப்படாத இந்த மனிதத் தன்மையற்றவனின்—விலங்கு குணத்தவனின், வஞ்சகமான, கபடமான, ‘கோழைச் செயலை’ எண்ண எண்ணச் சிந்தனையில் தீ மூளுகிறது. இவன் பெயரைக் கூறவும் நா கூசுகிறது, எழுதவும் கை மறுக்கிறது. இவனும் ஓர் பத்திரிகை ஆசிரியன் என்பதை எண்ணிப் பத்திரிகை உலகமே நாணுகிறது. இவன் சார்ந்திருந்த கட்சியின் பெயரைக் குறிப்பிடவும் நாம் வெட்கப்படுகிறோம். இந்தத் துணைக்கண்டம் முழுதுமே, இன்று துக்கக் கடலிலே ஆழ்ந்தது மட்டுமன்றி, இவ்வளவு விவேகிகளும், வீரர்களும், தியாகிகளும் நிறைந்த நாட்டில், இப்படியும் ஒருவன் பிறந்தானே, இருந்தானே என்பதை எண்ணி, வெட்கத்தால் தலை கவிழ்ந்து தேம்புகிறது.

தியாகி காந்தியாரது உடலில் படும் சிறு துரும்பும் தமது கண்ணில் பட்டதாகக் கருதும் தாய்மார்களும், அவரது உயிர்காக்க தம் இன்னுயிரையும் அளிக்க ஆயிரக்கணக்கிலே தயாராக உள்ள இளைஞர்களும் அவரைச் சூழ்ந்துள்ள இவ்வேளையில், அவரது உயிரைக் குடிக்கத் துணிந்த செயலை நினைக்குந்தோறும் நெஞ்சம் பதறுகின்றது.

அவர்மீது பாய்ந்த குண்டுகள் அத்தோடு நின்றுவிடவில்லை. பல கோடிக் கணக்கான மக்களுடைய உள்ளங்களிலேயும் சென்று பாய்ந்தவை ஆகும். அந்த உள்ளங்கள் அனைத்திலும் இரத்தம் கொப்பளித்துக் கசிகிறது. இரத்தம் கண்ணீராக வெளியிலே சொரிகிறது. இந்தக் கோலை ஒருவரது உயிர்க்கோலை மட்டுமல்ல-பலரது உணர்ச்சிக் கோலை, நம்பிக்கைக் கோலை, அன்புக் கோலை, நல்லெண்ணக் கோலை என்று கொள்ளும் நிலையது.

‘காந்தி இறந்தார்’ என்று மட்டுமே செய்தி கிடைத்திருப்பின் மக்களுக்குத் துயரக் கடலிலிருந்து மீள்வதற்கேனும் ஒரு ஆறுதல் ஏற்பட வழி இருந்திருக்கும். வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தின் தாக்குதல்களின் போதெல்லாம் கோலைக்கோ, தூக்குக்கோ ஆளாகாது, தமது வழியிலே தளராமல் நடந்து வெற்றி கண்ட காந்தியார் இன்று ‘கொல்லப்பட்டாரே’ என்பதுதான், நீரிலே அகப்பட்டுக் கொண்ட ஒருவன் தண்ணீரையும் விழுங்கி விட்டதைப்போல் மக்களைத் துயரக்கடலினின்று வெளியேற முடியாமல் தத்தளிக்கச் செய்துவிட்டது.

பிறவிக் குருடன் ஒருவன் கண்ணொளி பெற்று மறுபடியும் இழந்ததைப்போல, ஏழையொருவன் பெருஞ் செல்வம் பெற்று மறுபடியும் கெடுத்துவிட்டதைப் போல, முடவன் ஒருவன் கிடைத்த கொம்புத் தேனைக் கொட்டிவிட்டுக் கலங்கியதைப்

போல, மணமான தம்பதிகள் தம்முள் ஒருவரை இழந்ததைப் போல, இன்று, இந்தத் துணைக் கண்டத்து மக்கள் வெள்ளை ஏகாதிபத்தியத்தினின்றும் விடுதலை பெற்று, விடுதலை ஒளியாக விளங்கிய விவேகியை இழந்து பெருந்துக்கத்தில் ஆழ்ந்துள்ளனர்.

பண்டித நேரு தேம்ப, பட்டேல் கலங்க, கவியரசி ஏங்க, பர்னாட்ஷா சோகிக்க, பெரியார் இராமசாமி பதற, திரு. வி. க. துடிக்க, ஆச்சாரியார் குழம்ப, ஜின்னா துக்கிக்க, ட்ருமன் துயருற, அட்லி வருந்த, அம்பேத்கார் கலங்க, மன்னர் தம்பதிகளிலிருந்து மற்றெல்லோருமே துயரத்தில் ஆழ, 'தியாகி' என்ற உண்மை உலக வரலாறு உள்ளளவும் மறையாதபடி, தமது இரத்தத்தால் தீட்டிவிட்டு மறைந்துவிட்டார் காந்தியார்.

பெருந்தகை காந்தியாரின் உடலத்தைப், பிர்லா மாளிகையினின்று யமுனா ஆற்றங்கரைக்கு ஊர்வலமாக எடுத்துச் சென்ற பொழுது திரண்ட கூட்டத்திற்கு அளவே இல்லை. கடலெனத் திரண்டனர் மக்கள் தமது இறுதி மரியாதையைச் செலுத்த. ஆனால் அந்தக் கடலிலிருந்து அலை ஒலி எழும்பவில்லை, அவர்களுடைய தொண்டைகள் துக்கத்தால் அடைபட்டிருந்த காரணத்தால்.

அங்கிருந்து அந்நாள் முழுதும், ஏக்கத்தோடு ஒலிபரப்பப்பட்ட செய்திகளை, உலகின் பல்வேறு பகுதியிலே வாழ்ந்த மக்களும் உருக்கத்தோடு கேட்டனர். கேட்டனரே தவிர்த்துப் பேச முடியாத அளவுக்குத் துயரம் அவர்களை ஆட்கொண்டுவிட்டது.

உலகமே துக்கத்தில் ஆழ்ந்தது. காந்தியாரின் மறைவுக்காக வருந்தாத-மரியாதை செலுத்தாத நாடு இல்லை என்றே கூறலாம். ஒரு தனி மனிதருக்காக-மண்டிலாதிபதியல்லாத ஒரு மக்கள் தலைவருக்காக, இத்தனை நாட்டு மக்களும் வருந்தியது இதுவரை உலகம் கண்டறியாதது.

எழுபத்தெட்டு ஆண்டுகள் நிறைந்த காந்தியார், தமது வாழ்நாளின் பெரும்பகுதியை-ஏன் முழுவதையுமே பொதுப்பணிக்கெனச்செலவிட்டார். ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்பு முன்னணியில் பட்டதுன்பங்கள் பல.சிறையிலே கிடந்து வாடிய ஆண்டுகள் பல. பட்டினிகிடந்து கழித்த நாட்கள் பல. அவ்வளவும் பிறருக்கெனவே பட்ட துன்பங்களாகும். அவர் சரியென்றுகொண்ட எந்தத் திட்டத்திற்கும், உண்மையென்று கொண்ட எந்தக் கோள்கைக்கும், எப்பொழுதும் தம்மைத் தியாகம் செய்துவிடத்தயாராகவே இருந்தார்.

போர்க்களத்திலே நின்று முன்வைத்த அடி பின்னிடாமல், விழித்தகண் விழித்தபடி, மாற்றார் தொடுக்கும் கணைகளை மார்பிலே தாங்கி, பின்சாயாமல் முன்சாயும்பெருவீரனைப்போல், தமது கடமை என்ற களத்திலே இறுதி

வரையிலே கொள்கை பிறழாமல் நின்று, இன்முகத்தோடே உயிர் துறந்த உத்தமர் காந்தியாரின் பெயரும் புகழும் இனி மறையாது.

அமெரிக்காவில் அடிமை ஒழிப்புக்குப் பாடுபட்டு வெற்றிகண்ட ஆப்ரகாம்லிங்கன் கொலைக்காளானதைப்போலவும், அறிவுவளர்த்த சாக்ரடீசும், அன்பு வளர்த்த இயேசு கிறிஸ்தும் கொல்லப்பட்டதைப்போலவும், இந்துமதச் சீர்திருத்த கருத்துக்களைக் கொண்டு ஒற்றுமைப் பயிர் வளர்த்த காந்தியார் இன்றுகொலை செய்யப்பட்டுவிட்டார்.

தாயே தனது சேயைக் கொன்றதுபோலவும், தனயனே தந்தையைக் கொன்றது போலவும், மணமான மறுநாளே தம்பதிகளுள்ளே ஒருவர் மற்றொருவரைக்கொன்றதுபோலவும், மெய்க்காப்பாளனே தன் தலைவனைக் கொன்றது போலவும், தியாகி காந்தியார் எந்தநாட்டவருக்காகப் பாடுபட்டாரோ அந்த நாட்டவனாலேயே-எந்த மதத்தைச் சார்ந்தோரின் பெருமதிப்பிற்காளாகி இருந்தாரோ அந்த மதத்தவனாலேயே 'கொல்லப்பட்டார்' என்ற செய்தி தான், மின்சாரம் பாய்ந்ததேன நம்மைத் துடித்திடச் செய்கிறது.

இவற்றினும் முக்கியமாக அவர் எந்தக் கொள்கைக்காகப் பாடுபட்டாரோ—எந்தக் கொள்கைக்காக உயிர் வாழ்ந்தாரோ, அந்தக் கொள்கையை வேரறுக்கும் மிருகத்தனமே, இன்று அவரது அழிவுக்குக் காரணமாயிற்று என்பதை எண்ணிப் பார்க்கும் எவரும் திகைப்படைவர்.

புற்றிலிருந்து புறப்படும் பாம்பு போல, குகையிலிருந்து வெளிவரும் புலிபோல, அடிக்கடி மனித உள்ளத்திலிருந்து இந்தக் கொடிய விலங்கு உணர்ச்சி தலை நீட்டுகிறது. இதன் விளைவாக ஏற்படும் இழப்பு மதிப்பிடற்கரியது. இந்தக் காட்டு உணர்ச்சிக்கு இவ்வளவு பெரிய தியாகியைப் பலியிட்ட பின்னேனும், இதைத் தடுத்து நிறுத்த, எழாமல் அடக்க, இல்லாமற் செய்ய மக்கள் முற்படவேண்டும். அதுவே நாம் அவருக்குக் காட்டக் கூடிய நன்றியாகும்.

அவரது விருப்பமான அமைதியை நிலை நாட்டுவதே, அவருக்குக் காட்டும் நன்றியாக, நாம் கைக்கொள்ள வேண்டிய நெறியாகும்.

மேலும் இந்தக்கொலை உணர்ச்சி, மதப் பற்றினாலும், அதைவிட அதிகமாக வைதீகப் பற்றினாலுமே வளருகிறது என்பதைப் பொதுமக்கள் உணர வேண்டும். நாமும் காந்தியார் கொண்டிருந்த பல கொள்கைகளை ஒப்புக்கொள்ளாததோடு சிலவற்றை மிகவன்மையாகக் கண்டித்துள்ளோம் என்றாலும், அவையாவும் மனிதப் பண்பாட்டுடனேயேயன்றி,மிருகத்தனமாகவன்று; அறிவுக்கண்கொண்டேயன்றி வெறுப்பு மனப்பான்மையாலன்று.

மற்றும் காந்தியார் கொண்டிருந்த கருத்துக்களிலே மாறுபடுவது வேறு, அவரை மாய்க்க நினைப்பது வேறு. காந்தியார் காட்டிய நெறி தவறென்றால், மற்றொரு வழி காட்டுவதை விட்டு, கொள்கை தவறென்றால், தமது கொள்கையை நாட்டிலே பரப்புவதை விட்டு, வேறு வழியிலே இறங்கத் துணிய மாட்டார்கள், தன்னம்பிக்கையுடைய சீர்திருத்தக்காரர்கள். நாட்டிலே ஒரு பெரு மாற்றத்தை விளைவிக்க விரும்புபவர்கள் இத்தகைய இழி வழியில் இறங்கத் துணியமாட்டார்கள். வைதீக மனப்பான்மையும்,மதவெறியும், காட்டுப்போக்கும் கொண்டவர்களும், தன்னம்பிக்கையற்ற— அறிவிழந்த வெறியர்களுமே இத்தகைய குறுக்கு வழியில் அதன் ஆழத்தைக் கருதாமல் இறங்கத் துணிவர். எனவேதான் இந்த மதவெறியையும், வைதீகப்பற்றையும் அடியோடு ஒழித்து, அறிவுடையவாழ்வுக்கு—அன்பு வாழ்வுக்கு வழிகோல இத்தகைய மாபெருந்தகையாளரை இழந்த இவ்வேளையிலிருந்தாவது மக்கள் உறுதிகொள்ள வேண்டுகிறோம்.

இந்தியத் துணைகண்டத்தின் வடவெல்லையாக அமைந்துள்ள இமயத்தைப் போல் புகழின் எல்லையாக விளங்கிய காந்தியார் —இமயச் சிகரத்தைப் போல் மனிதருள்ளே உயர்ந்து தோன்றிய காந்தியார், இன்று மறைந்து விட்டார். அவரது உறுதியும், தொண்டும், தியாகமுமே அவரை இமயம் என விளக்கமுறச் செய்தன. இனி அவர் இல்லை; அவரது தொண்டின் பயன் மட்டுமே நிலவமுடியும். அந்தப் பயன் நிலவ, அவர் விரும்பிய அமைதியை நிலை நாட்டவேண்டும்.

அவரது திட்டங்கள் நடைமுறைக்கு வருமா? வெற்றி பெறுமா? என்பது ஒருபுறமிருந்தாலும், அவரது பொது நோக்கம் வெற்றிபெற்றே தீரும். இல்லையாயின் உலகம் தழைக்காது, மக்கள் வாழ்வு கெடும். அத்தகைய பொது நோக்கு கொண்ட புனிதர் மறைந்து விட்டார்.

இமயம் சரிந்தது, இருள் கவிந்தது, உலகம் அதிர்ந்தது, புகை நிறைந்தது, மக்கள் துயருழந்து துன்புற்று உள்ளம் குலைந்து நிலைகலங்கினர். வருந்தாத மனிதரோ, கலங்காத வீரரோ இல்லையாகும்படி— உலகத்தையே கண்ணீரில் மூழ்கச்செய்து விட்டது தியாகியின் முடிவு.

இமயம் சரியினும், நாடு மறுபடியும் வாழ்ந்துதானே ஆக வேண்டும்? எனவே நாட்டினர் யாவரும் மனந்தேறி—உறுதி கொண்டு பணியாற்ற வேண்டுகிறோம். நாட்டின் நலங்கருதி ஆற்றும்பணி ஆறுதல் அளிக்குமாக.

சாந்திக் கொலை வேண்டாம்!

தியாகி காந்தியார் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி, ஒரு திடீர் தாக்குதல்போல் நம் உள்ளத்திலே பாய்ந்து, நம் சாந்தியைக் கொலை செய்தது. அதன் அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் சுமார் இருபது பேர்களுக்குமேல் உயிர் விட்டுள்ளனர் எனச் செய்தி கிடைத்துள்ளது.

உத்தமரின் திடீர் மறைவு கேட்டு இறந்தவர்களிலே, இஸ்லாமியர், இந்து, கிருத்தவர், ஆகிய எம்மதத்தினரும் இடம் பெற்றுள்ளனர். மயங்கி வருந்துபவரோ இன்னும் பலர். காந்தியார்—எம்மதமாயினும் சம்மதம் என்று வாழ்ந்ததுபோலவே, எம் மதத்தினரும் அவரிடம் அன்புகொண்டு வாழ்ந்தனர். அவருக்கு, கீதையும்—குரானும், பைபிளும்—குறளும் விருப்பமானவை. அவர் இறந்தபோதும் குறள் தவிர்த்துப் பிறபடிக்கப்பட்டன.

அவர் இறந்தது குறித்து—வருத்தம் தெரிவிக்காத நாடோ—துயருறாத மதத்தினரோ, துக்கப்படாத கட்சியினரோ இல்லை.

இந்திய நாடு 'துக்கம்' கொண்டதைப் போலவேதான்—'பாக்கிஸ்தான்' நாடும் துக்கம் கொண்டது. வடநாட்டாரைவிட அதிகமாகவே தென்நாட்டார் துயருழந்தனர். 'காங்கிரஸ்' கொண்ட இழப்பை—திராவிடர் கழகமும் பிற கட்சிகளும் பங்கிட்டுக்கொண்டன. எனினும் நம் நாட்டில் ஈரோட்டில், இராச பாளையத்தில், திருவண்ணாமலையில், இடப்பாடியில், இன்னும் சில பல இடங்களில்—முஸ்லீம்கள் தாக்கப்பட்டனர் என்ற செய்தியும், அவர்களின் பெரும் இழப்பும் நம்மைத் திடுக்கிடச் செய்தன.

30-1-48-ல் காந்தியார் கொலைச் செய்தி வெளிவந்தவுடன், சில தமிழ்ப் பத்திரிகைகள் தெளிவாகச் செய்தியை வெளியிடாததாலும், மக்கள் கலங்கி இருந்ததாலும், சில அயோக்கியர்களின் தூண்டுதலாலும், காந்தியாரின் இலட்சியபுரியாக, அமைதியின் இலக்கணமாக விளங்கிய நம் தமிழகத்தில் முஸ்லீம்கள் தாக்கப்பட்டனர் என்பதை அறியும்போது துக்கம் மேலிடுகிறது.

உண்மையில் உத்தமர் காந்தியாரைக் கொன்றவன் ஒரு வெறிபிடித்த மத வாதி, வட நாட்டான், மஹாராஷ்டிரத்தைச் சேர்ந்தவன். அதிலும் இந்து மதப் பார்ப்பனன்; இந்துமஹா சபையின் 'ஹிந்து ராஷ்டிரா' என்ற தீவிரப் பத்திரிக்கையின் ஆசிரியன். ராஷ்ட்ரிய சேவா சங்கத்தின் ஒரு முக்கிய உறுப்பினன். இவ்வளவு உண்மைக

ளையும் மறந்து விட்ட மக்கள்—இங்குள்ள சிறுபான்மையினரான முஸ்லீம்கள் மீது பாய்வது வெட்கக் கேடாகும்.

ஒரு மனிதனின் செயலுக்கு—அந்த மனிதனைக் கொண்ட சமுதாயத்தின்மீது ஆத்திரப்படுவதைக்கூட தடுக்கவேண்டிய இவ் வேளையில்—வேறொரு சமுதாயத்தின் மீது காட்டு விலங்குகளைப்போலப் பாய்வது மிக மிக வருந்தத் தக்கது.

வட நாட்டு வெறியன் ஒருவன் இழைத்த அநீதிக்கும் கொடுமைக்கும் மத வெறியற்ற தென் நாட்டுச் சமுதாயம் ஒன்றின் மீது பாய்வதா? இந்து செய்த கொடுமைக்கு, முஸ்லீம்களைத் துன்புறுத்துவதா? பார்ப்பனன் ஒருவன்—ஆரிய இனத்தவன் செய்த அக்ரமத்துக்கு—இங்குள்ள தமிழர்கள்—திராவிட இனத்தவர் இரத்தம் சிந்துவதா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

இக் கொலையைக் கேள்விப்பட்டவுடனே, பலப் பல இடங்களில் இந்து மகா சபையினர் இனிப்பு வழங்கிக் குதூகலித்தனர் என்றும், ராஷ்ட்ரீய சேவா சங்கத்தினர் வெற்றிக் களிப்பு மீதூரினர் என்றும் செய்திகள் வந்தன. 'காந்தியாரைக் கொன்றது கட்சி தூண்டியல்ல, ஒரு தனிப்பட்ட வெறியன்தான்' என்றால், இவைகளுக்கெல்லாம் இடமேது?

இந்த நிலையில், இந்து என்று பெருமைப்படப் பேசிக்கொள்கிறவர்களும், 'நான் பிராமணன் சார்! உயர்ந்த ஜாதி, என்று அகம்பாவம் கொண்டவர்களும் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், வெட்கத்தால் நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாமே யன்றி—மற்றவர்களுடைய மனம் மேலும் புண்படும்படி 'அவன் இந்துவல்ல; அரக்கன்' என்று வாதிடுவதும் நம்முடைய கட்சி புனிதமானது தான்; இந்து மதத்துக்கு ஒரு கட்சி வேண்டாமா? என்று கேட்பதும் யோக்கியப் பொறுப்பாகாது. அதோடு சிறுபான்மையினரான முஸ்லீம்களையும் மற்றவர்களையும் தாக்குவதும் துன்பத்திற்கு ஆளாக்குவதும் கொடுமையாகும்.

பலவிடங்களில் கலகத்தைத் தூண்டிவிட்ட மதவெறியர்களின் இந்தக் கட்சிகள் (இந்து மஹாசபை... ராஷ்ட்ரீய சேவா சங்கம்) இனி நாட்டிலே நிலவுவதே நாட்டிற் கிழிவாகும். மக்கள் அந்தக்கட்சிகளில் தொடர்பு கொள்ளக் கூடாது. நாடெங்கும் மக்களாகவே விலகிக்கொள்ளுவதையும் அக்கட்சிக் கிளைகள் கலைக்கப்படுவதையும் காணச் சிறிது ஆறுதல் தோன்றுகிறது.

நம் நாட்டு மக்களோ; நந்தனரை நெருப்பிலிட்டுப் பொசுக்கிய பார்ப்பனீயம், இராமலிங்கனாரைச் சமாதியடையச் செய்த வைதீகம், சிரத்தானந்தரைக் கொலை செய்த ஆரியம், இன்று காந்தியாரையும் கொலை செய்தது என்பதையும் உணர்ந்து

தலைவர் துயரம்

காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற சேதி, உண்மைதான், என்ற நிலை ஏற்பட்டதும், மனம் பதறிவிட்டது. கடந்த முப்பது ஆண்டுகளாகவே இப் பரந்த துணைக்கண்ட மக்களின் வருங்கால வாழ்வுக்கு வழிகாட்டியாய் இருந்து வந்தார். பலதரப்பட்ட வகுப்பு மக்களுக்கும் பொதுவாகவும் நியாயமாகவும் நடந்து வந்தார். மக்களுக்கு அவரது தொண்டு, மகத்தானது. அவரது 'கோட்பாடுகள்' உலகப் பெருமை பெற்றுவிட்டன.

வட இந்தியாவில் நடைபெற்றுவரும் கலவரங்களுக்கெல்லாம் அடிப்படையாயிருப்பது மதவெறியேயாகும். இக் கொலைப் பாதகத்துக்கு மதமும், வைதீகமும்தான் தூண்டுகோலாய் இருந்திருக்கலாம் என்பது என் கருத்து. இக் கொலைக்குத் திரைமறைவில் பலமான முயற்சி நடந்தே இருக்கவேண்டும். அதுவும் காந்தியார், எந்த மக்களுக்காகப் பாடுபட்டாரோ, உயிர் வாழ்ந்தாரோ. அவர்களாலேயேதான் இச் சதிச்செயல் ஏற்பட்டிருக்கவேண்டும். இது மிக மிக வெறுக்கத்தக்க இழி செயலாகும்.

இப் பெரியாரின் இப் பரிதாபகரமான முடிவின் காரணமாகவாவது—இனி அரசியல் மதவியல் கருத்து வேற்றுமை காரணமாகக் கலகமும் குழப்பமும் இல்லாமல் நடந்துகொள்வதே—அவருக்கு நாம் செய்யும் மரியாதையாகும்.

ஈ. வெ. இராமசாமி.

கொள்ளாமல் இஸ்லாமியர்மீது பாய்வது வெட்கக் கேடாகும்.

இத்துறையில், வட நாட்டாருக்கும் வழிகாட்டவேண்டிய தமிழ்நாடு, வட நாட்டைப் பின்பற்றுகின்ற தன்மையை நினைக்க நினைக்க நெஞ்சம் நோகின்றது. இந்து முஸ்லீம் வெறியுணர்ச்சியற்ற தமிழகத்தில் அவ்வுணர்ச்சியைத் தலைகாட்ட விடாதீர்கள். தலைகாட்டுமானால், ஒரு வெறியன், காந்தியைக் கொன்றான்; அந்தச் சமுதாயமே — நாட்டு மக்களே, காந்தியைப் பின்பற்றியவர்களே வெறிகொண்டு, காந்தியாரின் இலட்சியமாகிய சாந்தியை—அவர் இறந்து பெற்ற சாந்தியையே — கொன்றுவிட்டார்கள் என்ற உலகப் பழி ஏற்பட்டுவிடும்.

எனவேதான் வேண்டுகிறோம், இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறோம், தமிழ்நாட்டாரே! திராவிடத்தாரே! இதிபத் துணைக் கண்டத்தோரே! 'காந்திக் கொலை'யை அத்தோடு நிறுத்துங்கள்; சாந்திக் கொலை வேண்டாம்.

கவிஞர் இரங்கல்

சுடப்பட்டார் காந்தியார் என்
றுரைத்தனர், துயர்ந்த துள்ளம்!
உடல் உயிர் பொருள் உழைப்பை
நாட்டினுக் களித்தார்; நாட்டின்
கடல் நிகர் அன்பையே தம்
காணிக்கை யாகப் பெற்றூர்.
கெடல் உண்டோ அன்னூர் கொள்கை?
கிடைத்தது கேட்ட வெற்றி!

பாரதிதாசன்.

அறிஞர் துக்கம்

காந்தியாரது இறப்பால் நாம் மிக மிக மகத்தான நஷ்டத்துக்கு ஆளாக்கப்பட்டுவிட்டோம். கட்சிகளை, கட்டுகளை, ஆசாபாசங்களை, கோபத் துவேஷங்களைக் கடந்து நின்ற உத்தமரை இழந்துவிட்டோம்.

எந்தகைய துக்க அனுபவமும் இந்தச் சமயத்திலே ஆறுதல் அளிக்கும் ஆற்றலைப் பெற்றதாகக் காணேம். இந்தத் துக்கம் கட்சி, மத, குரோதச் சுவர்களை யெல்லாம் இடித்தெறிந்து நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றுக்கிப் பிளக்கிறது. மனதைக் கட்டுக்குக் கொண்டுவரவேண்டிய நேரமிது - தவறினல் - துக்கம் - மக்களைக் கல்லாக்கி விடும் - அவ்வளவு ஆழப்படிந்துவிட்டது.

சி. என். அண்ணுதுரை.

கலைஞர் கலக்கம்

மகாத்மா - சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தி கேட்டதும், என்னையும் அறியாமல் குழந்தைபோல் 'கோ' வென்று கதறிவிட்டேன். என்னருகில் சுமார் நூறு பேர் இருந்தார்கள், ஆனல் யாரும் ஆறுதல் கூற முன்வர வில்லை. எப்படி முடியும்? அவரவருக்குந்தான் இப் பெருந் துக்கத்தில் பங்கிருந்ததே.

கோபத்திற்கும் ஆத்திரத்திற்கும் இடமின்றி, மகாத்மா - நமக்குச் சொன்ன அன்பு - சாந்தம் - அகிம்சை இவைகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதே அவருக்கு நாம் செய்யக் கூடிய தொண்டாகும்.

என். எஸ். கிருஷ்ணன்.

★ உலகினரின் புகழ்மாலை

அளவுக்கு மீறி நல்லவராயிருப்பது எவ்வளவு அபாயகரமானது என்பதையே காந்தியாரின் மரணம் காட்டுகிறது.

—ஜார்ஜ் பர்னாட்ஷா.

காந்தியாரின் மரணம் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

—பிரிட்டிஷ் மன்னர்.

காந்தியார், இணையற்ற இந்தியத் தலைவராக மட்டுமின்றி சர்வ தேசத் தலைவராகவும் விளங்கினார்.

—ஜனாதிபதி ட்ரூமன்.

சமாதானம் நிலவுவதற்காக அரும்பாடுபட்ட ஆத்மீகத் தலைவர்.

—கிருத்தவத்தலைவர் போப் பையஸ்

இந்திய மக்களுக்குச் சுதந்திரம் அளித்தவர். தன்னலம் கருதாது உயிர் விட்ட தியாகி.

— ஏமன் டிவேலரா.

உலகின் தலை சிறந்த மக்களுள் ஒருவர். கால் நூற்றாண்டாக இந்திய விவகாரங்களில் அவர் கொண்ட பங்கு அளவிடற்கரியது.

— கிளாமண்ட் அட்லி.

பலாத்காரத்தை வெறுத்து நீக்கிய போர்வீரர். உறுதியும், ஊக்கமும் படைத்த அறிவின் செல்வர். அரசியல் வரலாற்றிலேயே காந்தியாருக்கு ஒரு சிறப்பான இடமுண்டு.

— விஞ்ஞானி ஐன்ஸ்டீன்.

அவரது உயர்ந்த நோக்கமும் மனித அன்பும் உலகினர் யாவருடைய உள்ளத்தையும் கவர்ந்து விட்டன.

—அப்டன் சிங்க்ளோ.

இயேசுவின் உயர்ந்த தத்துவங்களை மறந்திருக்கும் மக்களுக்கு அவைகளை மறுபடியும் நினைவூட்டும் துணிவும் திறமும் கொண்டவர்.

—ரோமென் ரோலந்து.

இந்தியாவின் உருவத்தையே மாற்றியதோடு இந்திய மக்களிடையே ஒரு புதிய எழுச்சியை, புத்துணர்ச்சியை, புது ஒற்றுமையை உண்டாக்கி விட்டார்.

—ஜான் கந்தர்.

காந்தியார் ஓர் அதிசயமான தத்துவம். அவர் உரத்த குரலிலேயே சிந்திக்கிறார்.

—லூயிபிஷர்

அந்தச் சிறிய மனிதரின் வாழ்க்கையோடு இயைந்து இந்தியா விடுதலை புரி நோக்கி நடந்தது.

—பெசில் மாத்யூஸ்

காந்தியாரிடம் இந்தியாவையே—அதன் உள்ளத்தையே நான் காண்கின்றேன்.

—பேர்ல்பக்

காந்தியார் ஓர் ஒப்பற்ற தலைவர். அவர் வகுப்பு ஒற்றுமைக்காகச்செய்த சேவை இணையற்றதாகும்.

—ஹென்றிகிரேடி.

காந்தியாரைவிட சிறந்த ஆத்மீகத் தலைவர் நம்மிடையே இருந்ததில்லை.

—ஸ்டாபோர்டு கிரிப்ஸ்.

பகைமையைக் காட்டிலும் அன்பே பெருவலிவுடையது என்பதை உலகிற்குணர்த்திய பெரியார்.

—பிரஞ்சு பிரதமர் ஷூமன்.

பலதரப்பட்ட மக்களை ஒற்றுமைப் படுத்திப் பிணைத்ததில் காந்தியார் கண்ட வெற்றி போன்று வேறு யாரும் காணவில்லை.

-பிரஞ்சு அயல்மந்திரி ஜார்ஜ்பிடால்ட்

மனித வர்க்கத்தின் மனசாட்சி.

—ஜார்ஜ் மார்ஷல்.

மனிதருள் மன்னர்.

—ஜெனரல் ஸ்மட்ஸ்.

காந்தியார் போன்று கொண்ட கொள்கைக்கு மனப்பூர்வமாகத் தியாகம் செய்தவர் யாருமே இல்லை.

—ஐ. நா. சபையின் முன்னாள் தலைவர் வான்லாங்கன் ஹோவ்.

மிகப் பெரிய மஹான்கள் சிலரில் ஒருவர்.

—நோயல் பேக்கர்

இந்தியாவின் விடுதலைப் போரில் காந்தியாரின் பெயர் என்றென்றும் நிலைத்திருக்கும்.

—ஐ. நா. சபையின் ரஷ்யப் பிரதிநிதி

ஆசியா கண்டத்தின் அறிவுத் திறனையும், பெருமையையும் காந்தியாரைப் போல் பிரதிபலித்தவர் வேறு யாரும் இல்லை.

—ஐ. நா. சபையின் சீனப்பிரதிநிதி.

ஒரு பெரிய தீர்க்கதரிசி.

—மெக் ஆர்தர்.

மனித சமூகத்திற்கே பெரிய மனிதரும் ஒழுக்கத்திற்கே தலைவரும் ஆவார்.

—சக்ரவர்த்தி ஹெய்லி செலாசி.

காந்தியாரின் தன்னல மற்ற தொண்டும், அன்பும், நல்லெண்ணமும், தியாகமும் அழியாப் பொருள்களாக நீடித்திருக்கும்.

—முஸ்தபா. எல். நகாஸ்.

அவர் இந்தியாவின் சிற்பி, ஆசியாவின் மஹான்.

—சீன அரசாங்கம்.

பலாத்காரத்தை ஒழித்துச் சமாதானமும் சகோதரத்துவமும் நிலைப்பதற்காகவே வாழ்ந்த தியாகி.

- காண்டர்பரி பாதிரியார்

உலகச் சமாதானத்திற்காகப் பாடுபடுபவர்களில் முதல்வர்.

- லார்டு லிஸ்டோவல்

காந்தியார் வாழ்வின் ஒளி. அந்த ஒளி இன்னும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு இந்நாட்டிலும், உலகம் முழுவதிலும் பரவி நின்று அனைவர் உள்ளத்துக்கும் ஆறுதல் அளிக்கவல்லது.

- பண்டித ஜவஹர்

அன்பு, சகிப்புத்தன்மை ஆகிய கொள்கைகளை நிலைநாட்டப் பாடுபட்டுத் தம் உயிரையே துறந்த உத்தமர்.

- மௌண்ட் பேட்டன் பிரபு

அவரது மறைவு உலகிற்கே ஒரு பெரிய நஷ்டம். அவர் ஒரு மாபெரும் தலைவர்.

- லேடி மௌண்ட் பேட்டன்

மனித உள்ளம் முற்றிலும் தூய்மை நிறைந்ததாய் இருக்க முடியும் என்பதற்குக் காந்தியார் ஓர் எடுத்துக்காட்டு.

- கவி தாகூர்

நாட்டை விடுவித்த புரட்சி வீரர்; என் ஏககுரு; எந்தை; என் தலைவர்; என் வழிகாட்டி.

- கவியரசி சரோஜனி தேவி

மிகச் சிறந்த செல்வம். ஒப்பற்ற மாணிக்கம்.

- சி. இராசகோபாலாச்சரியார்

காந்தியாரின் ஆன்மா அழிவற்றது; அஃது எப்போதும் நம்மிடையே இருக்கும்.

- பட்டேல்

இந்து சமுதாயத்தின் மிகப் பெரிய மனிதர்; எல்லோருடைய

பக்திக்கும் நம்பிக்கைக்கும் பாத்திர மான தலைவர்

- ஜனுப் ஜின்னு

காந்தியார் நமது காலத்துப் பெரியார். மக்கட்கு நல்லறிவு புகட்டவும், ஒற்றுமை உண்டாக்கவும் ஓயாது உழைத்தவர். காங்கிரசின் உயிர்நாடி-தந்தை.

- லியாகத் அலிகான்

காந்தியார் இந்து மதத்தின் குறிக்கோள்களை வாழ்க்கையில் கடைப் பிடித்தவர். அவரது முடிவு ஒரு சகாப்த முடிவாகும்.

- ஜபருல்லாகான்

நமதருமை பாபு நாட்டின் தந்தை.

- சரத் சந்திர போஸ்

அரசியல், பொருளாதார, கல்வித் துறைகளில் புது தத்துவங்களைப் புகட்டினார். ஒன்று பட்ட உலகை விழைந்தார்.

மவ்லங்கர்

இன்றைய உலகில் ஒரு மாபெரும் ஆத்மீக மனிதர்.

- ஜக் ஜீவன் ராம்

ஒரு பெரும் ஞானி. அவரைப் போன்றோர் நெடுங்காலத்திற்கொரு தடவைதான் தோன்றுவர்.

- சச்சிதாநந்த சின்ஹா

இந்தியாவின் தந்தை.

- ஜெயப்பிரகாஷ் நாரயண்

ஈடு செய்ய முடியாத தலைவர்.

- கோபால்சாமி ஐயங்கார்

சத்தியம், அகிம்சை, சமாதானம் ஆகியவற்றின் சின்னம். மனித வர்க்கத்தின் சேவகன்.

- ஆசப் அலி

அவர் மறைந்த பழமையின் தனிச் சின்னம்.

- சர். எஸ். ராதாகிருஷ்ணன்

உலகச் சமஷ்டியை அமைப்பதே காந்தியாரின் இலட்சியம்.

- ஆச்சாரியார் வினோபா பாவே

மாபெரும் சுதந்திர வீரர். ஏழை எளியவர்களின் நண்பர்.

- கஸ்னபர் அலிகான்

இந்தியாவின் மிக அருமையான குழந்தைகளில் ஒருவர்.

- காஜா நஜிமுத்தீன்

அவர் ஒரு சக்கரவர்த்தி! தூதுவர்; யோகி, பிதா, வழிகாட்டி.

- கே. எம். முன்ஷி

காந்தியாரும் இயேசுநாதரும் சகோதரர்கள்.

- டாக்டர் ஜெயகர்

பிறருக்கென்றே உழைத்தார்; பிறருக்கே உயிர் துறந்தார்.

- பம்பாய் முதல் மந்திரி கெர்

காந்தியாரின் சாதனையை நம் யுகத்தில் மதிப்பிட முடியாது.

- கிருஷ்ணன் மேனன்

உண்மை அகிம்சை வழி, உயிர்த் தியாக வழியாகும் என்னும்உண்மை நிலை பெற்றுவிட்டது'

- ஆச்சாரிய கிருபாலனி

சாதி மத பேதமின்றி யாவர்க்கும் ஊழியம் செய்வதென்பதே காந்தியார் கொண்டிருந்த ஆசை.

- சர் பஸூல் இப்ராஹிம் ரஹ்மதுல்லா

நாட்டின்தந்தை, உலகின் தோழர்.

- மணிலால் காந்தி

பாகிஸ்தானின் தலைசிறந்த நண்பர்.

- முகம்மது யூசுப்

சத்தியத்தின் மூர்த்தி, அகிம்சையின் சின்னம்

- ஐதராபாத் நிசாம்

இந்தியாவின் மறு மலர்ச்சியே காந்தியாரின் வாழ்க்கை வரலாறு.

- குவாலியர் அரசர்

இந்தியாவின் ஒப்பற்ற மகன்.

- திருவாங்கூர் அரசர்

காந்தியார் ஒரு பெரிய ஒளி.

- பிரஞ்சு இந்திய கவர்னர்

அவர் ஒரு சமாதானச் சின்னம்.

- வி. டி. கிருஷ்ணம்மாச்சாரியார்

இயேசுநாதரைப் போன்ற மகான்

- கோபிநாத் பர்தோலி

லெனின், சன்யாட்சன், காந்தியார் ஆகிய மூன்று ஆசியத் தலைவர்களிலேயும் தலைசிறந்த அரசியல் வாதியும், ஞானியுமான காந்தியார் தன் நாட்டையும் காலத்தையும் கடந்த தியாகியாவர்.

- சர். ஏ. இராமசாமி முதலியார்

காந்தியடிகள் குணக்குன்று; கொல்லாமை அவரது நோன்பு: பொறுமை அவர் அணிகலன்; தியாகம் அவர் செல்வம்; பிறர்க்குழைத்தல் அவர் தொண்டு.

- தமிழ்ப் பெரியார். திரு. வி. க.

உலகப் பெரியார்; வேறு எந்த நாட்டிற்கும் கிட்டாத ஒப்பற்ற தலைவர். இவரின் சேவை கிட்டியதற்கு இந்தியா பெருமைப் படவேண்டும்.

- சென்னை கவர்னர் நை

காந்தியார் இந்தயுகத்தின் தலைவர்; தாய் நாட்டு விடுதலைக்குத் தன்னையே அர்ப்பணித்தார்.

-பிரதமர் ஓ. பி. இராமசாமி ரெட்டியார்

மிகப் பெரிய உலகச் சாரணர்.

- சர். ஏ. இலட்சுமணசாமி

தியாகி காந்தியார் வருங்காலம் முழுதும் வாழ்கின்றவராவார்.

-சர். குமாரராசா முத்தையா செட்டியார்

இந்தியாவின் பரம்பரைச் சொத்தாகிய சாந்தம்.

- டாக்டர் வரதராசலு நாயுடு

மனித வர்க்கத்தின் தந்தை. உயர்ந்த குறிக்கோளுக்காகவே உயிர் வாழ்ந்து அதற்காகவே உயிர் துறந்தவர்.

- வி. கே. ஜான்

சங்கரர், மாதவர், இராமாநுசர் ஆகியோர் ஒன்று சேர்ந்த மஹான் தான் காந்தியார்

- திரு. எஸ். இராமசாமி நாயுடு

ஒவ்வொருவருடைய கண்ணீரையும் துடைக்க விரும்பிய உத்தமர்.

- டாக்டர் அழகப்ப செட்டியார்

மக்கட் சமுதாயத்தின் மாபெருந் தலைவர்: அரசியலை ஆத்மீகமாக்கியவர்.

- ஷாபி முகம்மது

காந்தியார் மறைவு நாட்டிற்கும் உலகிற்கும் ஒரு பெரிய இழப்பு.

-திரு. காமராஜ நாடார்

காந்தியாரின் மரணம் சாக்ரடீஸையும் இயேசுவையும் நினைவூட்டுகின்றது.

- டாக்டர் சுப்பராயன்

தியாகராஜரைப் போன்ற இராம பக்தர்.

- திரு. கோபால் ரெட்டி

காந்தியார் இறக்கவில்லை. நாம் தான் இறந்து விட்டோம் என்று கூற வேண்டும்.

- திரு. பக்தவத்சலம்

விடுதலையின் சிற்பி.

- திரு. அவினாசிலிங்கம் செட்டியார்

மனிதன் மனிதனுக்கு இழைக்கும் கொடுமையை எதிர்த்துப் போராடிய தியாகி.

- திரு பி. பாலசுப்பிரமணிய முதலியார்

மனித சமுதாயத்தின் தலைசிறந்த பிள்ளை. நியாயத்திற்கோர் அதிபதி.

- ஜனாப் முகம்மது இஸ்மாயில்

காந்தியார் ஒரு கொள்கையின் உருவம். எனவே அவர் கொலைக்கு அப்பாற் பட்டவர்.

- திரு. எஸ். இராமநாதன்

இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படப் பாடுபட்ட மகான்.

- பி. ஸி. ஜோஷி

[புகழ் மாலை வளர்ந்து கொண்டே செல்லும் தன்மையது. அணிவிக்கும் விருப்பத்தால் தொடுப்பதை நிறுத்தி நமது காணிக்கையைச் செலுத்துகிறோம்.]

உன்னாலும் ஆகும்

மேடைப் பேச்சு

சி. என். அண்ணாதுரை எம். ஏ.



(31-12-47-ல் சென்னை வானொலியில் நிகழ்த்திய சொற்பொழிவு)

இந்நாட்களில் மேடைப் பேச்சு, நாடாளும் நற்பணியில் முக்கியமான கருவியாகிவிட்டது. இந்தக் கருவி ஒரு சிலருக்கு மட்டுமே உரியதுமல்ல. அங்ஙனம் இருத்தலும் ஆகாது. மணிமுடி, வாள், ஜெபமாலை, இவைகளின் இடத்தை இப்போது மேடைப் பேச்சு கைப்பற்றி இருக்கிறது. ஜனநாயகம் வளர வளர, இதன் முக்கியத்துவம் வளரும். இதன் முக்கியத்துவமும், வலிவும் வளர வளர, இதனைக் கொண்டு தன்னலம் வளர்க்கும் ஆபத்தும் வளரக் கூடும். மக்களைத் தவறாக நடத்திச் செல்லுதற்கும் இதனைப் பயன் படுத்தும் தீய நோக்கமும் படரக் கூடும். திசை காட்டும் கருவி தீயோனிடம் சிக்கினால் கலம் பாறையில் மோதுதல் போல, அரசுகளை ஆட்டிவைக்கும் அளவுக்கு ஆற்றல் அமைந்த மேடைப் பேச்சு எனும் சக்தி, சாதனம், ஒரு சிலருக்கு மட்டுமே கிடைத்து, அவர்களும் அந்தச் சக்தியைத் தவறான காரியத்துக்குப் பயன் படுத்துவதானால், மக்களின் நலன், பாறை மோதிய கலமாகும். எனவே இந்தச் சக்தியை மக்களின் பெருவாரியானவர்கள் பெறுவதற்கு முயல வேண்டும்.

எந்தக் காரியத்துக்கும் காரணம் கூற, மேடைப் பேச்சு, ஆள்பவர்களுக்குத் தேவைப்படுகிறது. ஆள்பவர்கள் அடாது செய்து மக்களைப் பாடுபடுத்தாதபடி பாதுகாப்பு தேடிக் கொள்ள, மக்கள், மேடைப் பேச்சைக் கைக்கொள்ள வேண்டி இருக்கிறது. ஆக, ஆள்பவர், ஆளப்படுபவர் எனும் இரு சாராருக்கும், மேடைப் பேச்சு, ஒரு சமயம் வாளாக, பிறிதோர் சமயம்

கேடயமாக, ஒரு சமயம் விளக்காக வேறோர் சமயம் தீப்பந்தமாகப் பயன்படுகிறது.

முன்னாளில், வெளியார் படை எடுப்பு, உள் நாட்டுக் குழப்பம், காட்டு மிருகங்கள் நாட்டிலே புகாத படி பார்த்துக் கொள்வது போன்ற சில அடிப்படைக் காரியங்கள் மட்டுமே ஆள்பவர்களுக்கு இருந்தன. மக்களின் அன்றாட வாழ்க்கையிலே, அவர்களின் ஆட்சி புகுந்ததில்லை. இப்போது நிலைமை தலைகீழ்மாற்றம். அரிசி எந்த அளவு உண்ணலாம் என்று அளவிட ஆள்பவருக்கு அதிகாரம் இருக்கிறது. ஆஸ்திரேலியா சென்றாவது உணவுப் பொருள் கொண்டுவா, முடியாவிட்டால், ஆட்சிப் பீடத்தை விட்டு வெளியேபோ, என்று கூறும் உரிமை மக்களுக்கு இருக்கிறது. மக்களின் தனிவாழ்க்கையிலே இப்போது ஆள்பவர்களுக்கு, அதிகமான அளவு இடம் ஏற்பட்டு விட்டது. எனவே, மக்களுக்கும் ஆள்பவர்களின் தன்மை, நோக்கம், திட்டம் இவைகளைப்பற்றிக் கண்காணிக்கும் பொறுப்பு அதிகரித்து விட்டது. இந்தக் கண்காணிப்பு வேலைக்கு மேடைப் பேச்சு முக்கியமான துணையாகிறது. மேடைப் பேச்சு முக்கியம் என்பது சரி, ஆனல் முடியுமா? நம்மால் ஆகுமா? என்று எண்ணம் பிறக்கக் கூடும்

வானத்தில் வட்டமிடும் பறவைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டு, பிறகு, அது போன்று பறக்கும் சாதனம் கிடைத்தால் பயன் அதிகமாக இருக்குமே என்று மனிதன் எண்ணத் தொடங்கினன்- அந்த எண்ணம் ஆகாயவிமானத்தை ஆக்கித்தந்தது.

அலைகடலை அடக்கும் மரக்கலம் அமைத்தோர், ஆழ்கடலுக்குள்ளே, செல்லும் கலம் அமைத்தோர், விண்ணில் பறக்கும் விமானம் அமைத்தோர், தொலைவிலுள்ளதைக் கேட்கவும் காணவும் கருவிகள் கண்டு பிடித்தோர், காட்டாறுகளைக் கட்டுக்குக் கொண்டு வந்தோர், நீரிலே நெருப்பின் சக்தியைக் கண்டறிந்தோர், அனைவரும் நம்போல் மனிதரே. அவர்களால் முடிந்தது. நம்மால் ஆகும் என்ற நினைப்பு அவர்களை ஊக்குவிக்கும் சக்தியாயிற்று. அவைகள் சாத்தியமான போது, மேடைப் பேச்சா சாத்தியமாகாது. பேசாமலிருப்பது வேண்டு மானல் சிரமம். சிந்தையைஅடக்கியே சும்மா இருப்பதரிது. பேசுவது எளிது. பேசுவதை, ஒழுங்குக்கும் முறைக்கும் கட்டுப்படுத்துவதுதான், மேடைப் பேச்சு.

எனவே, இந்நாளில் மேடைப் பேச்சுக்குத் தேவையும் பயனும் உள்ளது என்பதை உணர்ந்து, அதனை நாமும் பெற முடியும் என்ற நம்பிக்கையும் கொள்வது, முதல்வேலை.

பிறகு, மேடைப்பேச்சு எங்கனம் அமைதல் வேண்டும், எப்படிப்பயன் படுத்த வேண்டும் என்பனவற்றைக் கவனிக்க வேண்டும். மேடைப் பேச்சு, தென்றலா, புயலா? தீஞ்சுவையுள்ள இளநீரா அல்லது வேம்பின் சாறு போன்றதா? எங்கனம் இருத்தல் வேண்டும் என்ற கேள்வி நிச்சயமாகத் தோன்றும். இந்த எண்ணம், ஒரு சறுக்குமேடை. மேடைப் பேச்சுக்குத் தங்களைத் தயாரித்துக் கொள்வோர் மிக ஜாக்ரதையாக ஊன்றி நடக்க வேண்டிய இடம் இது.

இனிமையாகப் பேசவேண்டும் என்பதொன்றையே குறிக்கோளாகக்கொண்டு மேடைப் பேச்சு முறை பயிலத் தொடங்குவது ஆகாத காரி

யம் மட்டுமல்ல தேவையுமற்றது. இதனால், சுடுஞ் சொல் பேசுவதே சிலாக்கியம் என்பதல்ல பொருள். சொல், சுடுமா, சுவை பயக்குமா என்பதொன்றையே நோக்கமாகக் கொள்வதுகூடாது என்பதைத்தான் கூறுகிறேன். அந்த முறையில் பேசுவது; ருக்மணிகலியாணம், ராம பட்டாபிஷேகம், சீமந்தனி கதை போன்ற காலட்சேபம் நடத்துபவருக்கு வேண்டுமானால், சாத்தியமாகக் கூடும்-பயனும் கிடைக்கக்கூடும். படிப்பை அரைக்காலாகக் காய்ச்சிய பால், அதிலே கற்கண்டுத்தூள், குங்குமப்பூவின் குழம்பு; இவ்வளவும் போதாதென்று பக்தியும் ஆசையும் கூட்டித்தரப்படக் கூடும். ஆனால் மேடைப் பேச்சு, காலட்சேபமல்ல. விவாதத்துக்குரிய உயிர்ப் பிரச்னைகளைப் பற்றிய கருத்துக்களை வெளியிடுவது. இனிமை எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்யும் நாவாணிபம் அல்ல, மேடைப் பேச்சு. வாய் பொத்தி, கைகட்டிக் கேட்கும் மக்கள் எதிரே நடத்தும் உபதேசமல்ல. அருள்வாக்கல்ல. பேசுபவர், கேட்பவர்களைவிட மேதை என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையுமல்ல. கேட்பவர்கள் இன்ன 'பொருள் பற்றிப் பேசிடுக என்று பணித்திட, பேசுபவன் அது போலவே நடத்தும், வசன சங்கீதமுமல்ல. வாழ்க்கையுடன் தொடர்பு கொண்ட பிரச்னைகளைப் பற்றி, மக்கள் குழப்பமான கருத்து கொண்டிருந்தால் தெளிவு அளிப்பது, மக்கள் மருண்டிருந்தால் மருட்சியை நீக்குவது, மக்கள் கவலையற்று இருந்தால், பிரச்னையின் பொறுப்பை உணரச் செய்வது, போன்ற காரியம். மக்கள் கொண்டுள்ள கருத்துக்கு முற்றிலும் மாறான வற்றையே கூறியாக வேண்டிய நிர்ப்பந்தமும் மேடைப் பேச்சாளனுக்குச் சில சமயம் ஏற்படக் கூடும். பேச்சைக் கேட்க வருபவர் அனைவரும் ஒத்த கருத்தினர் அல்ல. இந் நிலையில் மேடைப் பேச்சு இனிமை பயப்பது மட்டுமே குறிக்கோள் என்று கொண்டால் நடவாது, ஆகாது.

சரஸ்வதி தாண்டவமாடுகிறாள் அவன் நாவில் என்று புகழ்வதும், தம்பி என்னடா சண்டப் பிரசண்டமடிக்கிறான் வீசு மலைப்பிஞ்சுகளை என்று ஏசுவதும், ஏககாலத்தில் நடைபெறும் விநோதபுரியிலே இருக்கிறான். மேடைப் பேச்சாளி, எந்தப் பேச்சு, பலருக்கு இனிதாய், பயனுடையதாய் அறிவு நிரம்பிய தாய்த் தோன்றுகிறதோ, அதே பேச்சு வேறு சிலருக்குச் சுடுசொல்லாய், வெட்டிப் பேச்சாய், ஞான சூன்யமாய்த் தோன்றக் கூடும். அவரவர் அந்தந்த எண்ணத்திற்கு ஏற்ப நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடும். தென்றல் என்பர் சிலர், புயல் என்பர் சிலர். தேனினும் இனிய தென்பர் சிலர் கர்ணகடூரம் என்பர் சிலர். வீணுரை என்பர் சிலர், விவேக சிந்தாமணி என்பர் சிலர். இதிலே கவனம் செலுத்தக்கூடாது. மேடைப் பேச்சு, ஒரு பொறுப்புள்ள பணியாகவும், பயன் தரும் கருவியாகவும் இருத்தல் வேண்டும் என்ற நோக்க முடையோர்.

அச்சம், தயை, தாட்சணியத்துக்குக் கட்டுப்பட்டு, கருத்தை அடகு வைக்கும் குணமும் இருத்தலாகாது; காட்டுக் குதிரை மீதேறிச் செல்லும் முரட்டுச் சுபாவக்காரனின் கைத்தடி போன்ற போக்குதான் வீரமுழக்கம் என்றும் கருதலாகாது. இந்த இரண்டு வழுக்குப் பாதைகளுக்கும் இடையே உள்ள, நல்வழி, இன்னது என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. அந்தப்பாதை, பாடுபட்டு அவரவர்

கள் கண்டறிய மட்டுமே முடியும். ஆனால் அதற்கு, பேசுபவர்களுக்குத் தாம் பேசும் பொருளில் ஆழ்ந்த நம்பிக்கையும் மதிப்பும் இருப்பது போலவே, மன்றம் வரும் மக்களிடம் மதிப்பும் நம்பிக்கையும் வேண்டும். பேச்சே இனிமையாக இருக்க வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொள்வதைவிட, மக்களையும் கொள்கையையும் மதித்து, நம்பிக்கையுடன் பேசும் நோக்கம் சிறந்தது, மேலானது.

தீயினாற் சுட்ட புண் ஆறும்- என்ற வள்ளுவர் வாக்கு, தனிப்பட்ட உரையாடலுக்கு மிகப் பொருத்தமாக இருக்கும். பேச்சு மேடையிலே ஆறிய புண் அதிகம். நாவினால் சுட்ட வடு பெற்றதாக எண்ணிக் கல்வீசினோர், நல்வழி கண்டோம் அவர் உரையால் என்று பிறிதோர் நாள் உணர்ந்து, கல்தூக்கிய கரத்தால் கனத்த மாலையைத் தூக்கி வரும் காட்சிகள் நிரம்பிய விசித்திர புரி, மேடை.

எனவே, பேசும் பொருள் பயன் படத்தக்கதாகவும், வீணான வீம்புக்கு வித்திடாத வகையிலும் அமைத்துக் கொள்வது நல்லது. இனித்தே ஆக வேண்டும் என்று முயன்றால், சதங்கையும் ஜாலரும் தேடித் தீர வேண்டி வரும்.

இனிமையுங்கூட, கொள்கையின் உறுதியிலே இருந்து பிறப்பதுதான், கொள்கையை விட்டுக் கொடுப்பதால், வராது.

வள்ளுவர் வாக்கின்படி பேச்சு அமைவதற்கு வள்ளுவர் வாக்கின்படி கேட்பவர்களும் அமையவேண்டும். பேசுபவருக்கு முறைகூறிய வள்ளுவர், கேட்பவருக்கும் முறைகூறி இருக்கிறார்.

'எப்பொருள் யார், யார் வாய்க்
கேட்பினும்— அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு'

ஆனால் நடைமுறையில் இந்தக் குறள் இல்லை. மெய்ப்பொருள் காண்பதறிவு என்றார் திருவள்ளுவர். மெய்ப் பொருள் காண்பதரிது என்று ஆகி விட்டது நிலைமை.

இனி, பேச்சு, கருத்தின் தொகுப்பு. ஆகையால் பேச்சுபயனும் சுவையும் தருவதாக இருக்க, கருத்துக்களைக் கவனித்தாகவேண்டும். கருத்து, சிந்தனையின் விளைவு. சிந்தனை, காண்பன கேட்பனவற்றிலே தொடர்ந்து ஏற்படும் ஆர்வம். ஒரே பொருள், காண்போருக்கு வெவ்வேறு சிந்தனையைக் கிளறி வெவ்வேறு கருத்தைத்தூண்டி, அதற்கேற்ற முறையிலே, பேச்சு பிறக்கச் செய்யும். வேப்பிலை. வைத்தியர், பூசாரி, எனும் இருவருக்கும் வேறு வேறான எண்ணம் தருவது போல.

ஒரு எடுத்துக்காட்டு. குதிரையைப் பற்றிப் பேசும்படி சிலருக்கு அழைப்பு விட்டுப் பார்ப்போம் வேடிக்கையாக இருக்கும் அவர்களின் பேச்சு.

வரலாற்று வகுப்பு மாணவர் பேசுவதானால், குதிரைகளுக்குக் கெம்பீரமும் பெருமையும் ஏன் ஏற்படாது? மகாவீரன் அலெக்சாண்டர் ஏறிவந்தது, ப்யூசிபாலஸ் எனும் குதிரை மீது அல்லவா? என்று சுவையுறச் சொல்லுவார். தமிழக ஏடுபடித்தோர், தேசிங்குராஜா கதையில்வரும், பாராசாரி, நீலவேணி பற்றிப் பேசாமலிரார். பழம் பாடல் படித்தோர், முன் இருவர் தொட்டிழுக்க, பின்னிருந்து சிலர் தள்ள, மாதம் காத வழி பறந்த குதிரையைக்

காளமேகம் கண்ட காட்சி பற்றிக் கூறுவர். இண்டி குதிரைப் பந்தயத்தின் கேடுகளை விளக்கும் நோக்கமுடையோரோ, தாலி அறுக்கும் பிசாசே! தந்தைக்கும் தனயனுக்கும் பகை மூட்டும் சனியனே! சூழ்ச்சியிலே மக்களைச் சிக்கவைக்கும் சகுனியே! நேசர்களுக்கிடையே மனக்கிலேசத்தைக் கிளப்பிவரும் மாபாவியே! உன்னால் கெட்டன குடும்பங்கள் கொழுத்தனர் வட்டிக் கடைக்காரர்! குடித்தனத்திலே தீ மூட்டினாய்! கொலைக்கும் களவுக்கும் கூட காரணமானாய்! குதிரையே! கோரத்தின் சொரூபமே! பாபத்தின் கருவியே! பாதகத்தின் பங்காளியே! உன் குலம் அழிக! பூண்டின்றி ஒழிக! என்று கோபமாகக் கூறுவர். ஒரு சமயம் பிரம்தேவனை, இலட்சமி தேவியார், கோட்டானாகப் பிறக்கும்படிச் சாபமிட்டார். பிரமன் கோட்டானாகப் பிறந்தான். அந்தக் கோட்டான் முட்டையிலே குதிரை பிறந்தது என்றுள்ள புராணத்தைக் கூறுவார் புராணீகர். சைவப் பிரசங்கியாரோ, 'குதிரைகளா, அடியேனுக்கு அடங்காக் கோபம் பிறக்கும் அவைகளைக் கண்டதும். என் மணிவாசகன் இந்தப் பாழான குதிரைகளாலன்றோ சிறைப்பட்டான், துயருற்றான்' என்று துவங்கி, இறுதியில், 'ஆனால் தீர யோசிக்கும்போது பரியிடம் பரிவே பிறக்கிறது. ஏனெனில் மணிவாசகரின் பெருமை மாநிலம் அறியும் நிலை, குதிரையாலன்றோ ஏற்பட்டது, எனவே குதிரைக் குலம் வாழ்க!' என்று கூறி முடிக்கக் கூடும்.

குதிரையைப்பற்றி பேசுவதிலே இவ்வளவு வேறுபாடுகள் தோன்றக் கூடுமானால். நாட்டு நடவடிக்கை, நாடாள்வோரின் திட்டங்கள், ஏடுகளிலே உள்ள கருத்துக்கள் போன்ற பிரச்னைகளைப்பற்றிப் பேசும்போது வேறுபாடுகள் கொஞ்சமாகவா இருக்கும். எனவே மேடைப் பேச்சு, பல திறப்பட்ட கருத்துக்கள் உலவி, ஒன்றோடொன்று போரிடும் களமும் ஆகிறது. களத்திலே பரிசும் உண்டு, பகையும் உண்டல்லவா? கருவியும் கலங்கா உள்ளமும் வேண்டுமல்லவா?

கருத்துக்களைக் கொள்ளும்போது இந்த நிலை அறிந்து தொகுக்கவேண்டும். மலர்கள் பலவகை—வர்ணத்தில், மணத்தில். இவைகளில் மணமுள்ள மலர், மாலையாக்கப்படலாம், செண்டு ஆக்கப்படலாம், சரம் ஆக்கப்படலாம்.

மலர் கொண்டு மாலை தொடுத்தலிலே கைத்திறன் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் கைத்திறன் முழுவதும் காட்டி, காகிதப் பூமாலை தொடுத்தால், பயன் என்ன? மாலைக்கு முதற்பொருள் மணமுள்ள மலர். அதுபோல பேச்சுக்கு முதற்பொருள் சுவையும் பயனும் உள்ள கருத்துக்கள். மாற்றான் வீட்டுத் தோட்டத்திலே பூத்திடினும் மல்லிகைக்கு மணம் உண்டல்லவா? ரசிக்கத்தானே செய்வோம். அதுபோலவே பேசுபவரின் கருத்து பயன் தருமாயின், கேட்பவரின் கூட்டுறவு எத்தன்மையதாக இருப்பினும், அவர்கள் ஏற்றுக்கொள்வர். எனவே மேடைப் பேச்சுக்குக் கருத்துக்களைச் சேகரிப்பது, சிந்தனையில் விளையும்படிச் செய்வது மிக மிக முக்கியம். பூத்த மலரை அழகுறத் தொடுத்தல் போல கிடைத்த கருத்தைத் தொகுத்தும், வகுத்தும் பிரித்தும், வெல்லும் சொல் தெளிவான நடை, நம்பிக்கையூட்டும் போக்கு இவைகளைக் கொண்டு பேச்சு அமைத்தல் வேண்டும். அமைத்தல் வேண்டும் என்

பதைவிட அமையும் நிலை பெற வேண்டும் என்பது பொருத்தமாக இருக்கும். தூய்மையான நோக்கமும் தெளிவான அறிவும் கொள்கை வெல்லும் என்ற நம்பிக்கையும் இருக்குமானால், தட்டுத் தடுமாறிப் பேசும் பேச்சு நாளா வட்டத்தில் முழக்கமாகித் தீரும்.

அவர்போலப் பேசவேண்டும், இவர் உபயோகித்த சொல்லை வீச வேண்டும், இரண்டோர் மேற்கோள் வேண்டும், எமர்சன் இங்கர்சால் ஆகிய யாரையாவது துணைக்கு அழைத்தே ஆகவேண்டும், இடையிடையே நகைச்சுவைக்காக விகடத் துணுக்குகளைச் சேர்க்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டு பேச்சு அமைப்பது, ஒரு மல்லி, பக்கத்தில் தழை, பிறகோர் சாமந்தி, அடுத்துக் கொஞ்சம் தவனம், பிறகோர் மணமில்லா மலர், பிறகு தழை என்ற முறையில் தொடுக்கப்படும் கதம்ப மாலையாகும். கதம்பம், மலர் குறைவாகவும், தழை அதிகமாகவும் இருப்பின் மாதர் கொள்ளார். அதுபோலவே பேச்சும், கருத்து அங்கொன்றும் இங்கொன்றுமாகி, சுவைக்குதவாதன அதிகமாக இருப்பின் எவரும் கொள்ளார். எனவே கருத்து மிக மிக முக்கியம். நடை வானவில், அதிக நேரம் அழகளிக்காது.

நீதியை நிலைநாட்ட, நேர்மையை வலியுறுத்த, நாட்டிற்கேற்ற திட்டங்களை எடுத்துரைக்க, மடமையை மாய்க்க, கொடுமைகளைக் களைய, சிறுமைகளை - சீரழிவுகளைப் போக்க ஆர்வம் தோன்றவேண்டும். அந்த ஆர்வம் ஏற்படுத்தும் சிந்தனையிலே பூத்திடும் நல்ல கருத்துக்களை, அழகுறத் தொடுத்து அளிப்பதே மேடைப் பேச்சு.

மலர் மாலை மதயானை முன் வீசப்பட்டுக் காலில் மிதிபடுவதுபோல, நல்ல பேச்சுக்குப் பொல்லாத நிலை வருவதுமுண்டு. முகர்ந்து ரசித்து, கூந்தலிற் செருகி இன்புற்று மகிழும் மாதரிடம் மலர் சென்று பெருமையும் பயனும் பெறுவதுபோல நல்ல பேச்சு, சுவையும் பயனும் கண்டறிந்து பெறக்கூடியவர்களிடம் போய்ச் சேருவதும் உண்டு. ஆனால் என்ன ஆகுமோ என்ற ஏக்கத்தை முதலில் கொள்ளாது, கருத்துக் கோவையான பேச்சை நாட்டுக்கு அளிப்பது நமது கடமை என்ற எண்ணத்தை முதலிற் கொள்ளுவதே மேடைப் பேச்சில் வெற்றி பெறும் வழி. அந்த வழி அனைவருக்கும் பொது. அனைவருக்கும் உரிமை உண்டு. முயன்றால் யாரும் வெற்றி பெறலாம்.

●

அடுத்த இதழில் :—

அறிஞர் அண்ணாதுரையின்

'தொடர் சித்திரம்' தொடங்கப்பெறும்.

இரா. குழூஉத்தலைவன்.

மாநகர் கண்ட மணம்

முரசுகள் முழங்குகின்றன! சங்குகள் விம்முகின்றன! தாரை முதலியன காதுகளைத் துளைக்கின்றன! மத்தளங்களும் முழவுகளும் வானம் போன்று இடிக்கின்றன! அரசன் உலா வருவதைப்போல வெண்மையான குடைகள் செல்லுகின்றன. அதோ ஒருபெரிய கூட்டம் தெருவில் காணப் படுகின்றது. யானைகளும் குதிரைகளும் திரள்திரளாக வருகின்றன. வரிசை வரிசையாக மங்கல அணிகளை ஏந்திவருகின்றனர் சிலர். ஏதோ திருமணமாக இருக்கவேண்டும். அதிலும் அரச செல்வம் படைத்தவர் களின் திருமணம் போலும் இது!

“முரசதிர்ந்தன, முருடு இயம்பின,
முறையெழுந்தன பணிலம் வெண்குடை,
அரசு எழுந்ததோர் படியெழுந்தன
அகலுள் மங்கல அணி எழுந்தது.”

[முருடு-மத்தளம், பணிலம்-சங்கு, எழுந்ததோர் படி-உலா எழுந்ததைப்போல, மங்கல அணி-மங்கலப் பொருள்.]

இக்கூட்டத்தை நாமும் பின் தொடருவோம். ஊரை வலமாக மங்கல அணிகளுடன் வந்த இவர்கள் ஓர் வானோங்கிய மாளிகையினுள் நுழைகின்றனர். மாளிகையின் முன் ஓர் பந்தல். அடடா! முத்துக்களால் அல்லவா பந்தல் அமைத்திருக்கிறார்கள். என்ன வியப்பு! கண்கள்தான் நம்மை ஏமாற்றுகின்றனவோ? இல்லை; முற்றிலும் உண்மைதான். கால்கள் கூட பவளத்தால் ஆனவை. நீலப்பட்டாடைகளை எங்கும் விரித்துக் கட்டியிருக்கின்றார்கள். முத்துக்களின் ஒளியை நீலப்பட்டாடையில் அல்லவா பார்க்கவேண்டும்! எங்கும் மலர்மாலைகள் தொங்குகின்றன. இங்கே ஏராளமான பெண்களைப் பார்க்கின்றோம். மணவீடு என்றால் பெண்கள் கூட்டத்திற்குக் குறைவு ஏது? எங்கும் அவர்கள் அல்லவா!

அழகு தேங்கிய அவ்வணங்குகளில் சிலர் மணப்பொருள்களைத் தாங்கி நிற்கின்றனர். சிலர் மலர்கள் ஏந்திநிற்கின்றனர். பாடுகின்றனர் சிலர். உரையாடுகின்றனர் சிலர். இச்சமயத்தை நழுவவிடாமல் இளமங்கையர் சிலர் ஒருபுறமாகக் கடைக்கண்ணை ஓட்டிப்பார்க்கின்றனர். சந்தனமும்,

மணப்புகையும் தாங்கியவர் சிலர். வண்ணமும் சுண்ணமும் வாங்கிநிற்போர் சிலர். விளக்குகளை ஏந்தி முளைப்பாலிகைகளையும் நிறைகுடங்களையுங் கொண்டு புன்முறுவல் பூப்பவர்கள் பலர். எல்லோரும் திரண்டுவருகின்றார்கள். இதுபோல் சிரிக்கும் பெண்களை இழிவாக நினைக்கும் இக்காலத்தில் உள்ள நாம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே இருந்த பெண்ணுரிமையைக் கண்டு பெருவியப்படைகின்றோம்.

"விரையினர், மலரினர், விளங்கும் மேனியர்,
உரையினர், பாட்டினர், ஒசிந்த நோக்கினர்,
சாந்தினர், புகையினர், தயங்கு கோதையர்,
ஏந்துஇள முலையினர், இடித்த சுண்ணத்தர்
விளக்கினர், கலத்தினர், விரிந்த பாலிகை
முளைக்குட நிரையினர், முகிழ்த்த மூரலர்
போதொடு விரிகூந்தல் பொலன்நறுங் கொடிஅன்னார்,"

[விரை-மணம், ஒசிந்த-வளைந்த, சாந்து-சந்தனம், கோதை-கூந்தல், சுண்ணம்-கலவை மணப்பொடி, கலம்-அணிகலன். முகிழ்த்த மூரலர்-சிறிது தோன்றிய புன்முறுவலையுடையவர், போது-மலர், பொலன் நறுங்கொடி-பொன்னால் செய்யப்பட்ட மணம்வீசும் கொடி.]

பொற்கொடிகள் போல அசைந்துவரும் பூங்கொடிகளை விடுத்து உள்ளே நுழைந்த நாம் மணமக்களை அறிய ஆவல் கொள்ளுகின்றோம். அறியவேண்டுமென்றால் ஊர், பெயர், பெற்றோர் இவர்களைத் தெரிந்துதானே ஆகவேண்டும்.

ஊர்தான் முன்னமே தெரிந்துவிட்டதே. பூம்புகார். ஆம், புகார் நகரம் அவ்வளவு புகழ்வாய்ந்தது. தேவர் உலகமும், நாகர் உலகமும் ஒன்று கூடினால் எவ்வளவு இன்பம் கிடைக்குமோ, அவ்வளவு இன்பமும், செல்வமும் பொருந்தியது அப்பூம்புகார்.

"நாகநீள் நகரொடு நாகநாடு அதனொடு
போகம்நீள் புகழ்மன்னும் புகார்நகர் அதுதன்னில்."

[நாகம் நீள் நகர்-சுவர்க்கம், நாகநாடு-நாகர்கள் வாழும் கீழ்உலகம், போகம்-இன்பம்.]

இந்நகரத்தில் வாழ்கின்றவன் "மாநாய்கன்" என்னும் வணிகன். மழையும் அஞ்சும்படியாக வறியவர்க்கு வழங்கும் வள்ளல்! மாபெருஞ் செல்வன். இவனுடைய குடிவிளங்கும் கொம்பாகப் பிறந்தவள்தான் கண்ணகி. பொன்கொடி போன்ற அழகி. மின்னல் இடையினள். பின்னல் சடையினள். மெலிந்த—அழகிய உடல் வாய்ந்தவள். பன்னீராண்டிற்குட்பட்ட வயதினையுடையவள். கோவலன்பால் மாறாத காதல் கொண்டவள்.

"மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்
ஈகைவான் கொடிஅன்னாள் ஈராறுஆண்டு அகவையாள்."

[மாகம்வான்-விண்ணில் உள்ள மழை, குலக்கொம்பர்-குலக்கொடி, ஈகை-பொன், அகவை-உட்பட்ட வயது.]

அவ்வூர்ப் பெண்களில் கற்புக்கரசியாக விளங்கினாள் கண்ணகி. அவளுடைய நற்பண்பும், செயலும், ஒழுக்கமும் எல்லோரிடத்தும் ஓர் நன் மதிப்பை உண்டுபண்ணுவதாயிருந்தது. பற்பல கூறுவானேன், அவள் அம்மங்கையரிடையில் ஓர் கடவுளாகவே வணங்கப்பட்டாள்.

''மாதரார் தொழுதுஏத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர் மன்னும் கண்ணகிஎன்பாள்.''

[வயங்கிய-விளங்கிய, காதலாள்-கோவலன்பால் காதலை உடையவள்.]

இதே காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள மற்றோர் பெருஞ்செல்வன் ''மாசாத்துவான்'' என்னும் வணிகன். சோழனால் சிறப்பிக்கப்பட்ட பெருங்குடிகளுள் ஒருவன். ''எட்டி'' என்னும் பட்டமும் பொன்னால் செய்த பூவும் பெற்றோன். அளவற்ற செல்வனாயினும், விருந்தினர்களை உண்பித்து மகிழுவதையே விளையாட்டாகக்கொண்டவன். அவன் பெற்ற அருமை மகன்தான் நாம் கண்ட மணமகன் கோவலன். பதினெட்டிற் குட்பட்ட வயதையுடையவன். பல்கலைகளும்பயின்றவன். காமனும் வெட்கும்படியான கட்டழகன். உலகமும் குறுகும்படியாக வளர்ந்த புகழை உடையவன். நெறிதவறாத நேர்மையாளன். 'செவ்வேள்' என்று போற்றி அவ்வூர் மகளிர் வணங்கும் பெருமை பெற்றவன். கண்ணகியினிடம்கொண்ட மாறாத காதலால் களவுப்புணர்ச்சியில் ஈடுபட்டு இப்போது கடிமணம் செய்து கொள்ளுகின்றான்.

''இருநிதிக் கிழவன்மகன் ஈரெட்டுஆண்டு அகவையான்
அவனுந்தான்,
மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
கண்டுஏத்தும் செவ்வேள்என்று இசைபோக்கிக் காதலால்
கொண்டுஏத்தும் கிழமையான் கோவலன் என்பான்.''

[இருநிதிக் கிழவன்-பெருஞ்செல்வன், தேய்த்த-தன்புகழை நோக்க சிறியதாகும்படி செய்து, பண்-இசை, ஆயத்து-கூட்டத்தில் ஏத்தும் செவ்வேள்-வணங்கத்தக்க முருகன், இசைபோக்கி-புகழ் பரவச்செய்து, காதலால் கொண்டு ஏத்தும் கிழமையான்-கண்ணகியிடத்தில் காதல்கொண்டு போற்றுகின்ற உரிமையுடையவன்.]

மணமக்களை இப்போது நாம் நன்றாகத் தெரிந்துகொண்டோம். இனித் திருமண நிகழ்ச்சிகளைப் பார்ப்போம். பண்டைக்காலத் திருமணங்களில் தாலி கட்டுவதில்லை இக்காலத்தைப்போல. தாலிகட்டுவதென்பது மிகப் பிற்கால வழக்கங்களில் ஒன்று. பெண்களை இழிவாக நினைத்த பேயர்கள்—மணம் என்றால் இன்னதென்றறியாத மற்றையவர்களால் இப்பழக்கம் ஏற்பட்டிருக்கவேண்டும். ஆனால் காதல் இருவர் கருத்து ஒருமித்து அன்பு

பொருந்திய இன்பம் நுகர்ந்த பழங்காலத்தில் இந்த அடிமை விலங்கு அணியப்படுவதில்லை. மேலும், விறகுக்கட்டைகளில் நெய்யை ஊற்றிப் புகைப்பதுபோன்ற வீண் செயல்களும், வாய்க்குவராத, மனதிற்கு எட்டாத வடமொழி பிதற்றும் மறையவர்களும் அக்காலத்தில் இல்லை. அந்த அந்தக் குடியில் முதிர்ந்து அறிவால் நிரம்பியுள்ள முதியவர்களே முன்னால் நின்று இம்மணவினையை முடித்துவைப்பார்கள். விளக்கு ஏற்றிவைத்து அதனை வலம்வந்து வணங்கல், மலர்மாலை பூட்டுதல் முதலிய சில நிகழ்ச்சிகள்தான் அக்காலங்களில் நடைபெறும்.

இவற்றைத்தான் கோவலன் திருமணத்திலும் நாம் காணமுடிகின்றது. அந்த அந்த மரபிற்குரிய கலைகளை உணர்ந்த முதியவர்கள் "மாமுது பார்ப்பான்" எனவும் வழங்கப்பட்டனர். மணமகனின் பாட்டனாரே பெரும்பாலும் இக்காரியத்தை நடத்துவார்.

முறைப்படி நிகழ்ச்சிகள் யாவும் நடைபெற்றன. திங்கள், உரோகிணி என்னும் விண்மீனோடு கூடியுள்ள நன்னாளில் தீயை வலமாகவந்து கோவலன் கண்ணகிக்கு மாலையிட்டான்.

"வானூர் மதியம் சகடு அணைய வானத்துச்
சாலி ஒருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழிக் காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார்கள் நோன்புஎன்னை!"

[சகடு-உரோகிணி, சாலி-அருந்ததி, தகையாள்-தன்மையை உடையவள், மாமுது பார்ப்பான்-மிகவும் முதிர்ந்த பிதாமகன் (பாட்டன்), மறை-வணிகர்க்கென்று உள்ள நூல், என்னை?-எவ்வளவு உயர்ந்தது.]

இக்காட்சியைக் காணும் மக்கள் உள்ளம் மகிழ்ச்சியால் பொங்குகின்றது. இதனைக் காண்பதற்குச் செய்த நோன்பு என்னே! என்னே! என்று எல்லோரும் பாராட்டுகின்றனர்.

பொன்கொடிபோன்ற மின்னிடை மங்கையர் மணமக்களின்மீது மஞ்சளரிசியும், மலரும்தூவி வாழ்த்துகின்றனர். 'காதலர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாமலும், கைநெகிழாமலும் குற்றமின்றி வாழ்க 'நெடுநாள்' என்று எல்லோரும் உள்ளத்தோடு வாழ்த்துகின்றார்கள்.

"காதலன் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல்
தீதறுக எனஏத்திச் சின்மலர் கொடுதூவி."

[கவவுக்கை-தழுவியுள்ள கை, தீது அறுக-குற்றம் நீங்குவதாக, ஏத்தி-வாழ்த்தி, சில்மலர்கொடு-சிலவகைப்பட்ட மலர்களைக்கொண்டு.]

இப்போது நமக்கு ஓர் ஐயம் எழுகின்றது. இவ்வளவு கற்புடைய பெண்டிர்களும், பெரியோர்களும் உள்ளத்தோடு வாழ்த்துகின்றார்களே, இவ்வாழ்த்துக்கள் என்னவாயின? கோவலனும் கண்ணகியும் எவ்வாறு ஆயினர்? என்று யோசிக்கின்றோம். இயற்கைதானே இது. ஆனால் உற்று நோக்கினால் இதற்கு விளக்கம் கிடைக்கும். இதுபோன்ற இடங்களில்தான்

புலவர்களின் பாடல் அழகைக் காணவேண்டும். வாழ்த்த வேண்டுமென்றால், நீடூழி வாழ்க! இன்பம் பொங்குக! என்பன போலல்லவா வாழ்த்த வேண்டும். அதுதான் இல்லை. பிரியாமல் வாழ்க! குற்றம் நீங்கி வாழ்க! என்றல்லவோ வாழ்த்துகின்றனர். பிரியாமல் என்றபோதே பிரிவும், குற்றம் நீங்குக என்னும்போதே குற்றமும், உண்மையாதலும் பெறப்படுகின்றனவன்றோ! இத்தன்மையான நிலையில் பாடலை அமைத்த புலமைத் திறத்தை எவ்வாறு புகழ்வது!

பெண்கள் வாழ்த்துகின்றனர். பெரியோர் வாழ்த்துகின்றனர். மக்கள் வாழ்த்துகின்றனர். இம்மக்கள் மணவாழ்த்துக் கூறும்போதுகூட மன்னனையும் வாழ்த்துகின்றனர். தங்கள் அரசனையும், அவன் வெற்றியையும் அவர்களால் எப்போதும் மறக்க முடிவதில்லை. அத்துடன்கூட இன்னும் ஒரு பேராவல் அவர்களுக்கு. தங்கள் வேந்தன் சோழன் வெண்பனிக்குன்றம் வரையில் படை எடுத்துச்சென்று அதன் உச்சியில் புலிக் கொடி நாட்டிவந்தான் அல்லவா. இதை உலகம் போற்றிற்று, புகழ்ந்தது. இவர்களுக்கும் மட்டற்ற மகிழ்ச்சிதான். என்றாலும் அதில் ஒரு குறை அவர்களுக்கு. மலையின் இப்புறத்தில்தானே அக்கொடி நாட்டப்பட்டது. அப்புறத்தில் அல்லவா நாட்டப்படவேண்டும். ஆகவே இப்போதாயினும் அக்கொடி அப்பால் சென்று பறக்கும்படியாகத் தன் ஆழியைச் சோழன் உருட்டுவானாக என வாழ்த்துகின்றனர் தம்மை மறந்த நிலையில்; அவ்வளவு ஆவல் அவர்களுக்கு!

‘‘இப்பால் இமயத்து இருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொன்கோட்டு உழையதா எப்பாலும்,
செருமிகு சினவேல் செம்பியன்,
ஒருதனி ஆழி உருட்டுவோன் எனவே.’’

[இருத்திய நிலையாக நாட்டிய, வேங்கை-புலிக்கொடி, வாள்-புலிக்கு அடையாய் நின்றது, உப்பாலைப் பொன்கோட்டு உழையதா-மேருமலையின் அப்புறத்தின்கண் சென்று நாட்டப்படும்படியாக, செருமிகுசினம்-போரில் மிகுந்த சினத்தை வெளியிடுகின்ற, செம்பியன்-சோழன், உருட்டுவோன்-செலுத்துவானாக.]

உறைந்த இரத்தம்

இராதாமணாளன்

சிக்மகளூர் அன்று மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்தது. தெருக்களில், தோரணங்கள் காற்றோடு விளையாடிக் கொண்டிருந்தன. பெண்களின் முகங்களைக் காண நாணிய ரோஜா மலர்கள், அவர்கள் முகத்திற்குப் பின் புறமாகப்போய் கூந்தலில் ஒன்றிக்கொண்டன.

மாலை மறைந்தது. இரவும் ஆரம்பமாயிற்று. அத்துடனே மணத் தம்பதிகளின் ஊர்வலமும் ஆரம்பமாயிற்று.

வரிசை வரிசையாக தீப்பந்தங்கள்! மங்கள வாத்தியங்களின் இனிமையான கீதம்! விளக்கின் ஒளியினால் மின்னிய பெண்களின் கன்னங்கள்! அழகாக அலங்கரிக்கப்பட்ட பல்லக்கு! அதில் வாழ்க்கை என்ற பூஞ்சோலையில் கை கோர்த்துக்கொண்டு புதிதாக நுழைந்த இளம் தம்பதிகள்!

தீப்பந்தங்களின் ஒளி மணமகளின் முகத்தில் பட்டுப் பிரதிபலித்தது. மணப் பெண்ணின் அழகைக் கண்டோர் புகழாமலிருக்க முடியாது. அவள் அழகின் வடிவம்!

மெதுவாக ஊர்வலம் நகர்ந்தது. திரள் திரளாக மக்கள் ஊர்வலத்தோடு வந்துகொண்டிருந்தனர். ஊர்வலமும் அலிகாரின் அரண்மனையின் அருகேவந்தது. அலிகார் சாதாரண உடை அணிந்து, மெதுவாகக் கூட்டத்திற்குள் புகுந்து விட்டான்.

அவன் கண்கள் மணப்பெண் கோசலாவைப் பார்த்தன! அவளைக் காணக்காண அவன் கண்கள் பரந்து விரிந்து ஒளிவிட்டன. மற்றவர்கள் கண்களுக்கும் அவனது கண்களுக்கும் தண்ணீருக்கும் தீக்கும் உள்ள மாறுபாட்டைவிட மிகுந்த மாறுபாடு காணப்பட்டது.

ஊர்வலத்துடனே அவனும் மெதுவாக நடந்து சென்றான். கோசலாவைப் பார்க்கப்பார்க்க அவனது உள்ளம் தீக்காடு ஆயிற்று! கண்களை மூடிக்கொண்டு, கவலையோடு வேகமாக அரண்மனைக்குத் திரும்பினான்.

அன்றிரவு, இளங்கொடியாளின் இதழ்த் தேனைப்பருக உமிழ்நீர் கசிந்துகொண்டிருந்த அவன் வாய், சோற்றை விரும்பவேயில்லை! அவளது அணைப்பால் குளிமைபெற எண்ணிய அவன் உடல் கட்டிலில் சாய்ந்ததும் சூடுகண்ட புழுப்போல் துடிதுடித்தது. அவன் உள்ளம் அழகு சிலை கோசலாவை வலம்வந்த வண்ணமிருந்தது!

* * *

அலிகார் திப்புசுல்தானின் தோழன். வாலிபப் பருவம், வசீகர முகம், திரண்ட தோள், அச்சத்தின் நிழலும்படாத உள்ளம், அரசியல் நுணுக்கங்களை ஆராய்ந்துகூறும் அளவு அறிவுத்திறம்—யாவும் அவனிடம் அமைந்திருந்தன. ஆனால் ஒரேஒரு குறை! மன்னிக்கமுடியாத

குறை! அழகிய மங்கை மலர்களைக் கசக்கி நுகர்வதில் அடங்காத ஆவல் கொண்டவன் அவன்!

திப்புவிற்கு, அலிகார் கைகளென உதவினன்! வில் வித்தையிலும் போர்முனையிலும் தேர்ந்த படையை நடத்திச்சென்று, எதிரிகளின்மேல் பாய்ந்து, அவர்கள் ஆணவத்தை அடக்கி, வெற்றிமாலையைத் திப்புவின் கழுத்தில் சூட்டிவந்தவன், அலிகார்! ஆகவே அவன் செய்த அட்டூழியங்களைக் கண்டு மனம் நோக முடிந்ததே அன்றி, திப்புவினல் அதற்குமேல் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவனால் வாழ்விழந்த வனிதையர் ஏராளம்! பாழான குடும்பங்கள் பலப்பல! ஒரு சமயம், மக்களின் வாய்கள் அவன் வீரத்தையும் பெற்ற வெற்றியையும் பேசி மகிழும்! மறுசமயம் அவர்களது கண்கள் அவனது இழிசெயலைக்கண்டு நீரைச் சிந்தும்!

திப்புசுல்தான் அரசாண்ட மைசூருக்கும், அதற்கு வடக்கேயிருந்த சாம்பூர் ராஜ்யத்திற்கும் போர் மூண்டது. வீரன் அலிகார், போர்க்களத்தில் எதிரிகளைத் தாக்கி, அவர்களின் உயிர்களைப்போக்கி, வெற்றிக் கொடியை நாட்டினன். மன்னர், மனம் மகிழ்ந்தார். அலிகாரின் தோள்வலியைப் பாராட்டினர்.

அலிகாரின் வீரத்திற்கு, மதிப்பளிக்க அவனைத் தன்னாட்டின் ஒரு பாகத்திற்குப் பிரதிநிதியாக நியமித்தார். அலிகார் பிரதிநிதியான பிரதேசத்தின் தலைநகரமான சிக்முகளூருக்கு, ஐந்நூறு குதிரைப் படையும், யானை வரிசையும், முன்னும் பின்னும் வர ஆடம்பரத்தோடும், ஆனந்தத்தோடும் வந்தடைந்தான். அவனைக் குறித்து சிக்முகளூர் வாசிகள் அறிந்திருந்ததினல் அச்சமும் துக்கமுமடைந்தனர்.

அவ்வூருக்குவந்த சில மாதங்களுக்குப் பிறகுதான், மணமகள் கோசலா பல்லக்கில் செல்வதைக் கண்டான்.

அன்றிரவு அவனுக்குத் தூக்கமே வரவில்லை. அவளை அடையாவிட்டால், உயிர்வாழ்ந்து என்ன பயன் என்றெண்ணினன்! அவன் உள்ளத்தில் பற்பல தோன்றித் தோன்றி மறைந்தன! கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தான்!

* * *

மறுநாள் பொழுது புலர்ந்தது. மணமகன் சோமப்பாவின் வீட்டின் முன்பு ஒரு போர்வீரன் வந்து நின்றான். சோமப்பா ஒரு பெரிய வியாபாரி. பழைய புகழ்வாய்ந்த குடும்பமொன்றில் தோன்றியவன்.

போர்வீரன் தந்த அரச முத்திரையிட்ட கடிதத்தைப் படிக்கும் பொழுது, சோமப்பாவின் நெற்றியில் வியர்வை அரும்ப ஆரம்பித்தது. கவலையின் குறி அவன் முகத்தில் தோன்றியது.

வீட்டினுள் சென்று தன் இளம் மனைவி கோசலாவிடம் செய்தியைக் கூறினன். அவள் கண்கள் கலங்கின. மனைவியிடம் விடை பெற்றுக் கொண்டு, அலிகாரின் அரண்மனைக்குச் சென்றான் சோமப்பா.

அலிகாரைக் கண்டதும் பயத்தால் அவன் உள்ளம் சுருங்கியது! கைகால்கள் சிறிது நடுக்க முற்றன!

'பாஜி வம்சத்தில் பிறந்த சோமப்பா நீர் தானே?'

'ஆமாம்.'

'எமது திப்பு மன்னரின் ஆட்சியைக் கவிழ்க்க, ஆங்கிலேயரோடு கூடிச் சதி செய்யும் கூட்டத்தில் நீர் சேர்ந்திருக்கிறீராமே, உண்மையா?'

இதனைக் கேட்டதும் சோமப்பா வின் தலையில் இடி விழுந்தது போலிருந்தது. அவன் பயம் அதி கமாயிற்று. அலிகாரின் கண்கள் கோபத்தால் சிவந்தன!

ஏன் தயங்குகிறீர்?......உண்மை தானே?'

'எனக் கொன்றும் தெரியாது! இதுவரைக்கும் நான் மைசூரில் இருந்தேன்!'

'அப்படியா? இந்தக் கடிதத்தைப் படித்துப் பாரும்! இதில் நீர் அந்த ரகசியக் கூட்டத்தில் சேர்ந்திருப்ப தாக இருக்கிறதே, இதற்கென்ன சொல்கிறீர்?'

கடிதத்தை நடுங்கும் கைகளால் வாங்கி, கலங்கிய கண்களால் வாசித் தான்!

'இது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இங்கிருந்தல்லவா எழுதப் பட்டிருக்கிறது. நான் அப்பொழுது மைசூரில் அல்லவா இருந்தேன்!'

'அதெல்லாம் எனக்குத் தெரி யாது! சிக்முகளூரில் பாஜி வம்சத் தைச் சேர்ந்த சோமப்பா நீர் ஒருவர் தாம்! ஆகையினால் இதனை நீர்தாம் எழுதியிருக்க வேண்டும். நீர் நிர பராதி என்று நிரூபிக்கும் வரை சிறையில் உம்மை அடைத்து வைக்க உத்திரவிட்டிருக்கிறேன்! நிரபராதி என்று தெரிந்தால் விட்டு விடுவேன்! குற்றம் செய்ததாக உறுதியாகி விட் டால் உம்மைத் தூக்கிலிடுவேன்!' என்று ஆவேசத்தோடு கூறிவிட்டு, அலிகார் அறையினுள் சென்று விட் டான். சோமப்பா, கம்பிகளுக் குள்ளே கிடந்து தேம்பினான்!

இச்செய்தியைக் கேள்விப்பட்ட சோமப்பாவின் குடும்பத்தாரும், மனைவியும் கலங்கினர். நேற்று இரவு வரைக்கும் இன்பத் தென்றல் வீசிக் கொண்டிருந்த இடத்தில், திடீ ரென்று பயங்கரமான துன்பப் புயல் வீசத் தொடங்கியது!

கோசலா, போர் வீரர்கள் தோன் றிய வம்சத்தில் பிறந்தவள்! ஆகவே அவள் உள்ளத்தில் வீரமும், தீரமும் நிறைந்திருந்ததில் ஆச்சரியமொன்று மில்லை. கணவன் அக்கிரமமாகக் கைதியானான் என்ற செய்தியை எண்ண வெண்ண அவள் மனதில் கவலையும் அதைவிட அதிகமாக ஆத் திரமும் பொங்கியது.

சிறிது நேரத்தில் துக்கத்தை மாற்றி தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, 'மூடு வண்டியைத் தயார் செய்க' என்று உத்திரவிட்டாள்.

அவள் சுற்றத்தார்கள் பயத்தால், கோசலா என்ன செய்யப் போகிறாள் என்பது புரியாமல் திகைத்தனர்.

'ராஜப்பிரதி நிதியைக் கண்டு, இது அடுக்குமா? என்று நானே கேட்கப் போகிறேன்' என்று அவள் கூறியதும், உறவினர் திடுக் கிட்டு அவளைத் தடுத்தனர். பய னில்லை. ஆவேசத்தோடு புறப்பட்டு விட்டாள்.

தன்னைக் காண வந்த அழகிக்குச் சுலபத்தில் பேட்டி தந்தான் அலிகார்.

ஒரு புறமாக ஒதுங்கி நின்று, கோசலா பேச ஆரம்பித்தாள்.

'என் கணவர் ஒரு தவறும் செய் தறியாதவர். விரோதத்தினால் யாரோ அவர் மேல் வீண்பழி கூறி யிருக்கிறார்கள்!.....'

'வீண்பழியை நம்புபவன் நானல்ல! தக்க ஆதாரத்தோடுதான்

அவரைக் கைது செய்திருக்கிறேன்! ...அவர் ராஜதுரோகி...!'

'அவர் தந்தையும், என் தந்தையும் மன்னனிடம் அன்பு கொண்டவர்களாகயிருந்த பொழுது இவர் மட்டும் எப்படி ராஜதுரோகியாக இருக்கமுடியும்?'

'ஆதாரங்களின் பேரில்தான் நான் கூறுகிறேன். அவர் ராஜ துரோகி தான்?'

'ஒரு பாவமும் அறியாத அவரை விடுவிக்க வழியில்லையா?'

என் இல்லை? உண்டு!........... நாளை மாலை இங்கு வா! உனக்கு வேண்டிய உதவியை நான் செய்கிறேன்;

பிறகு நேரே கோசலா சிறைச் சாலைக்குச் சென்று, தன் கணவனைக் கண்டாள். அந்த நிலையில் அவனைக் கண்டதும் அவளுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.

'தாங்கள் ராஜதுரோகியா?'......

'இல்லை! இல்லை கோசலா!...''

'ஆதாரம் ஏதாகிலும் இருக்கிறதா?......'

'இருக்கிறது கண்ணே!'

'சொல்லுங்கள்...........உடனே சொல்லுங்கள்! அவற்றைக் காட்டித் தங்களை உடனே விடுவிக்கிறேன்!'

'கோசலா நான் மைசூரிலிருக்கும் பொழுது ஒருதரம் திப்பு மன்னருக்கு உதவி செய்திருக்கிறேன். அதற்குஅடையாளமாக எனக்கொரு பதக்கம் அரசர் தந்திருக்கிறார்; அதனைக் காட்டினால் போதும். உடனே உனக்கு யாரும் உதவியளிப்பார்கள்!'

'அப்படியானால் இப்பொழுதே அதனைச் செய்கிறேன்!'

'கோசலா! கண்ணே! நீ அந்தப் பொல்லாதவனின் எதிரில் செல்லாதே!......எனக்குப் பயமாகவே இருக்கிறது!......'

ஆபத்து நேரத்தில் வேறு வழியேது? வீரமரபில் பிறந்த எனக்கு, என்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரியும்! கவலைப்படாதீர்கள்!......'

* * *

கதிரவன் பொன்னொளி வீசும் மாலை நேரம்! அலிகார் நன்றாக, அழகாக உடையணிந்து அழுகிய உள்ளத்தின் துர்நாற்றத்தை மறைப்பதற்காக, உடலில் வாசனை தைலங்களைப் பூசிக் கொண்டிருந்தான்.

கோசலா அரண்மனையை வந்தடைந்தாள். ஆவலோடு வர வேற்றான் அலிகார்!

'வா! கோசலா!' என்றான் அவன் கண்களில் காமக் கனல் வீசியது அவன் முகம் வெறி பிடித்தவனைப் போல தோன்றியது. அவனது புது நிலையைக் கண்ட கோசலா பயந்தாள்!

உன் கணவனைக் காப்பாற்ற வேண்டுமல்லவா?'

'ஆமாம்!'

'நீ மனம் வைத்தால்தான் உன் கணவன் விடுதலைபடைய முடியும்!'

'எனக்குப் புரிய வில்லையே!'

'கண்ணே! என் மனம் போல் நடந்து கொள். உன் மணாளனை விடுவிக்கிறேன்!'

அவனது தீய எண்ணத்தை அறிந்து திடுக்கிட்டாள். அவள் உள்

ளம் பதைத்தது! உடல் வெட வெடத்தது. நடு நடுங்கும் நங்கையின் பொன் நிறக் கையைக் காமுகன் பற்றினான்! உதறி விட்டு ஓட ஆரம்பித்தாள்! பசி கொண்ட புலி போல் பாய்ந்தான்! மான் விழியாள் சிக்குண்டாள்! அவன் பசிக்கு உணவானாள்! அன்றிரவே அவளது கணவன் தூக்கு மரத்தில் தொங்கினான்!

* * *

மறு நாள் கோசலா, மயக்கம் தெளிந்து எழுந்தாள். ஒருமுறை தன் உடலைப் பார்த்தாள். நாணிக் குனிந்துகொண்டாள்! மனதில் ஆத்திரம் பொங்கி யெழுந்தது,

கணவன் தூக்கிலிடப்பட்டான், என்ற செய்தியைக் கேட்டதும் சொல்லொணாத் துக்கத்தில் ஆழ்ந்தாள்.

இரண்டு நாட்கள் சென்றன! வஞ்சகனைப் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று தீர்மானித்தாள். பதங்கத்தை எடுத்துக்கொண்டு மூடு வண்டியில் நேரே திப்புவிடம் செல்லப் புறப்பட்டாள்.

திப்புவைக் கண்டதும் மூர்ச்சையடைந்து விழுந்தாள்! மூர்ச்சை தெளிந்தெழுந்ததும் மன்னனிடம் தன் சோக வரலாற்றைச் சொல்லி முடித்தாள்.

அதனைக் கேட்டதும் திப்பு சுல்தானுக்குக் கோபமும் சோகமும் மேலிட்டன!

தன் சேவகர்கள் மூலம் உடனே அலிகாரையும் அவன் நண்பன் உசேனையும் அழைத்து வரும்படிக் கட்டளை இட்டார்.

* * *

ஆசனத்தில் அமர்ந்திருந்த திப்புவின் கண்களில் தீப்பொறி பறந்தன! பயத்தோடு தலை குனிந்தபடி நின்றிருந்தான் அலிகார். அவன் அருகே உசேன் வியர்க்க வியர்க்க நின்றான். ஒரு பக்கமாக நீர் வழியும் கண்களோடு நின்றுகொண்டிருந்தாள். கோசலா.

'அலி! கோசலா சொல்வது உண்மையா?'

அலிகார் பதில் கூறவுமில்லை. குனிந்த தலையை நிமிர்த்தவுமில்லை

'உசேன்! கோசலா சொல்வது உண்மைதானா?'

'மகராஜ்! எனக்கொன்றுமே தெரியாது!'

'துரோகி! யார் அங்கே......இவனைப் பிடித்துக் கம்பத்தில் கட்டுங்கள்!........ஒரு கொரடாவைக் கொண்டு வா!..... ...'

ஆவேசம் வந்தவரைப்போல ஆசனத்திலிருந்து துள்ளி யெழுந்தார் மன்னர்.

உசேனைக் கம்பத்தில் கட்டிவிட்டுப் பலமாக அடித்தார்கள்!

'உண்மை! கோசலா கூறுவது அவ்வளவும் உண்மை!' என்று கதறினான் உசேன். திப்புவின் கண்களில் நீர்த் துளிகள் தோன்றின. எங்கும் மௌனம் நிலைத்தது........

'கோசலா! இந்த அலிகாருக்கு என்ன தண்டனை தரலாம்?'

'அது தங்களின் விருப்பம்...... எனக்கு உத்தரவளியுங்கள்!'

'எதற்கு?'

'உடன் கட்டை ஏற!.

'அது கூடாது!'

திப்பு மன்னர் யோசனையில் ஆழ்ந்தார்! பிறகு ஒரு முடிவுக்கு வந்தவரைப்போல திரும்பவும் கோசலாவிடம் பேச ஆரம்பித்தார்.

'கோசலா என் சொல்லைத் தட்டாமல் நீ நடக்கவேண்டும்! நீ அலிகாரை மணந்துகொள்!'

'ஆ......!'

'உன் மதிப்பைக் காப்பாற்ற அது தான் வழி!'

'அநியாயம்! திப்புசுல்தானா இப்படிப் பேசுகிறார்? என்னால் நம்ப முடியவில்லையே!''

'கோசலா! என் கருத்து இப்பொழுது உனக்குப் புரியாது!' என்றார் திப்பு. கோசலாவோ அப்பொழுது சம்மதிக்கத்தானில்லை.

* * *

அலங்கரிக்கப்பட்ட கட்டிலறை. மலர்கள் தூவப்பட்டிருந்த மஞ்சத்தின்மேல், கண்களில் ஒளிவீச, நரம்புகளில் துடிதுடிப்பு அதிகரிக்க, உள்ளம் உவகையில் முழுக, அலிகார் கோசலாவின் வருகையை எதிர் நோக்கி காத்துக் கொண்டிருந்தான்.

தலைகுனிந்த வண்ணம், அழகிய உடையணிந்து உள்ளே வந்தாள் கோசலா! கதவு தாளிடப்பட்டது! இன்னும் சிறிது நேரத்தில் அழகி அவளே இசைந்து தரும் இன்பத் தேனைப் பருகப்போகிறோம் என்பதை எண்ணியதும் அவன் மனம் ஆனந்தத்தால் கூத்தாடியது.

தயங்கி நின்ற கோசலாவின் அருகே சென்றான்.

'கண்ணே! இன்னுமா கவலை? இதோ...... இதோ...... இப்படிப் பார்......' என்று கூறிக்கொண்டே அவளை அணைக்க முயன்றான்.

அவள் கண்களில் கனல் பறக்க நோக்கினாள்! அவள் உடலைத் தொட்டான்! உருவினாள் இடையிலிருந்த உடைவாளை! ஆவேசத்தோடு பாய்ச்சினாள் அவன் மார்பில்! கீழே சாய்ந்தான். அந்தக் காமுகனின் உடலிலிருந்து குபீர் குபீரென்று இரத்தம் பீறிட்டுக்கொண்டு வெளி வந்தது.

'மாண்டான் மங்கையரின் வைரி! தூய முகமதிய மதத்தில் பிறந்த தூர்த்தன் தொலைந்தான்!' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டாள். தன் மார்புக்கு நேரே வாளைத் திருப்பிப் பிடித்தாள்! அவள் கண்களில் வீரத்தின் ஒளி கடைசி முறையாக வீசியது. ஐயோ! அவ்வளவுதான், சாய்ந்துவிட்டாள்! அவள் மார்பிலிருந்து குருதி கொப்பளித்துக் கொட்டியது. கட்டிலறை இரத்த மயமாயிற்று. அந்த உறைந்த இரத்தத்தில் இரு உடல்கள் உருண்டு கிடந்தன.

* * *

காலை வெகு நேரமாகியும் கதவு திறக்கப்படாததினால், திப்பும், அவர் மந்திரிகளும் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தனர்! அறையில் இரத்தம் பரவி யிருப்பதையும், உறைந்த இரத்தத்தில் இருவர் உடல்களும் உருண்டு கிடப்பதையும் கண்டதும், திப்புவுடன் வந்தவர்கள் திகைத்துத் திடுக்கிட்டு நின்றனர். திப்புவின் முகத்தில் மட்டும் புன் முறுவல் பூத்தது.

'இப்படி நடக்கும் என்று எனக்குத் தெரியும் முன்பே!' என்றார் மன்னர், மகிழ்ச்சி கலந்த பெருமிதமானகுரலில்!

சிறுவனும் காக்கையும்

புலவர். பாலதண்டாயுதபாணி (நன்னிலம்)

●

சிறுவன் : காஃகா வென்றே கத்திடும் காக்கை !
ஆஃகா உன்றன் அழகும் குரலும்
கண்டோர் மீண்டும் காணவும் எண்ணூர் ;
கேட்டோர் மீண்டும் கேட்கவும் எண்ணூர் ;
அப்படி யிருந்தும் இப்பார் தன்னில்
சிறந்தோர்ப் போலப் பறந்து திரிகிருய்.

காக்கை : உருவில் சிறுவ ! உணர்ந்திலை எம்மை
அதஞ லன்ருே இதனைக் கூறிஞய்,
உன்னிடம் பேசலென் உயர்வுக் கேற்குமோ ?

சிறுவன் : ஆருயிர் நண்பனும் அறிவுடைக் காக்கை நீ
கத்தும் ஒலியோ காதுக் கின்ஞ
நாவற் பழம்போல் மேவிய உன்றன்
கருப்பு நிறமோ வெறுப்பைத் தந்திடும்
உள்ளதைக் கூறிஞல் உடம்பெரிச்சல் தானே ?

காக்கை : ஓஃதோ சிறுவ உண்மை யறிந்திலை
இஃதோ கூறுவேன் எளிதில் உணர்ந்திடு ;
என்றன் குரலை இகழ்ந்தனை அதுதான்
விடியலில் மக்கள் விழித்தெழச் செய்யும்
நள்ளிராப் பொழுதில் நாழிகை காட்டும்
ஆறறி வுடைய சீரிய மக்கள்
ஓரின மாயினும் ஓயாச் சாதியின்
பேதங் கொண்டு மோதி வருந்துவர்
“ அருந்தும் உணவுதான் அமுதமே யாயினும்
விருந்தினை விட்டுணல் பொருந்துவ தன்றெனும் ”

தென்றமிழ் மறையை நன்றேன உணர்ந்து
நாங்கள் யாவரும் பாங்குடன் ஒன்றி
உன்னை அழைக்க உதவும்; அன்றியும்
வருத்தமும் மகிழ்ச்சியும் வகையாய்க் காட்டும்
காஃகா ஒலியே காக்கையின் பெருமையை
கடுகும் விடாது காட்டிடு மென்றறி.

சிறுவன்: கள்ள மில்லாக் காக்கைநீ யாயின்
உள்ளதை உரைத்திடு உன்னிறங் கருப்பே.

காக்கை: ஆமாம் சிறுவ அதில் தவ றில்லை,
கார்நிற மென்பது ஓர்நிற மன்றோ
உன்றன் செந்நிறம் உள்ளங் காலில்
என்றன் கருநிறம் உன்றலையி லதனல்
கருப்பை வெறுப்பரோ கற்றறி மாந்தர்
இஃதே போதும் என்னிறப் பெருமைக்கு;
கருநிறத் தார்களைக் கடைய ரென்று
வெண்ணிறத் தார்கள் விலக்கல் முறையோ?
வேதனை தந்திடும் சாதிப் பேயை
வண்ணத் தால், வகுத்தல் மண்ணவர்க் கழகோ?
ஆதலின் நீயும் அகற்று தென்னை
நட்பாக் கொண்டு பெட்பே பெறுக!

சிறுவன்: செய்தி யொன்றைச் செவியிற் கேட்டேன்
"காக்கையுந் தன்னிறம் பொன்னிற மென்னும்"
கேட்டது போலவே நீட்டினுய்ப் புதுமொழி
நன்று நன்று நவின்றது நன்று

* * * *

என்றது கேட்ட எளிய காக்கை
காஃகா வென்றே கடுகிப் பறந்தது
சிறுவனும் சென்றான் செங்கதிர் போலே.

உரைகல்

'சிறு கதைகள்'

ஆசிரியர்: சி. என். அண்ணுதுரை,

பக்கம் 80-விலை ரூபா ஒன்று. வெளியிடுமிடம்:-திராவிடப் பண்ணை, தெப்பக்குளம், திருச்சி.

எழுத்தாளர்களுள்ளே தலை சிறந்து விளங்கும் அறிஞர் அண்ணுதுரை அவர்கள் தீட்டியுள்ள இச்சிறு கதைகள், வெறும் பொழுதுபோக்குக்காக வன்றி, கருத்து வளர்ச்சிக்கும், வாழ்க்கை அறிவுக்கும் பயன்படும் முறையில் அமைந்துள்ளன. 'சிறுகதை' எழுத்தாளர்களே கூட, கைக்கொள்ளவேண்டிய இந்தக் குறிக்கோளுக்கு இந்நூல் ஓர் எடுத்துக்காட்டாகும். இவ்வாசிரியரின் புன்முறுவல் பூத்த உருவமே இதன் முகப்பை அழகு செய்கின்றது.

கள்ளோ? காவியமோ?

ஆசிரியர்: மு வரதராசனுர் எம்.ஓ.எல்.

பக்கம் 260. விலை ரூபா மூன்றரை. விற்பனை உரிமை: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1.

பேராசிரியர், வரதராசனுர் அவர்கள் மறுமலர்ச்சிக்கான கருத்துக்களைப் பலதுறைகளிலேயும் வெளியிடுகின்ற ஓர் உயர்ந்த எழுத்தாளர். அவர் எழுதியுள்ள இந்நூல் அவரது புதுப் பெருங்கதைகளுக்குள்ளேயே சிறந்து விளங்குவதாகும். இந்நூல் வாழ்க்கைக்காகவே கலை என்ற உண்மைக்கு ஓர் இலக்கியமாகும்.

இந்நூலில் 'வேலைக்காரியாக' வருகின்ற மங்கை, கல்லூரி ஆசிரியரான அருளப்பனை மணப்பது, ஏழைப் பெண்ணும் புரட்சிகரமான வாழ்க்கையை ஏற்றுக்கொள்ள முடியும் என்பதையும் சூழ்நிலையின் துணை கிடைக்காத காரணத்தாலேயே தமிழ் மகளிர் பலரும் - தமிழ் இளைஞரும் கூட - அறிவாற்றலிலும் வாழ்க்கையிலும் தாழ்நிலையுற்றிருக்கின்றனர் என்பதையும் காட்டுகிறது. 'வேலைக்காரி' என்ற தனி இனம் எதுவும் பிறப்பிலே கிடையாது; அவ்வாறு ஒரு கூட்டத்தை அழைத்துத் தாழ்நிலையில் வைத்து நடத்துவது மனித இனத்துக்கே மாசு கற்பிப்பதாகும் என்பதை மிக அழகாக இக்கதையில் தொடர்ந்து கோத்துக் காட்டுகின்றார். சீர் திருத்த வாதியான அருளப்

பனே கூட அசட்டுப் பெருமை யை - 'உலகத்தை' எண்ணி உயர்ந்த குறிக்கோளிலிருந்து தவறிவிட நேருவதும் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது. உண்மையான உழைப்புக்கும், உண்மையான நோக்கங்களுக்கும் இன்னும் மதிப்புக் கிடைப்பதில்லை என்பதும் வெளிப்பகட்டைத்தான் உலகம் மதிக்கிறது என்பதும் தெளிவாகத் தீட்டப்பட்டுள்ளன. இந்நூல், படிப்போர் உள்ளத்தை உருக்கித் தன்வழி இழுத்துச்செல்லும் ஆற்றலை— அதன் எளிய, இனிய தமிழ் நடையாலும், ஆழ்ந்த கருத்தாலும் பெற்றுள்ளது.

'பெண்' கள்ளைப் போன்று அனுபவிக்கும் பொருள் என்ற கருத்துக்கொண்ட அருளப்பன்களுக்கு, 'பெண் மனிதனைப் பாழ்படுத்துங் கள்ளன்று, மனிதனை உயர்த்தும் சிறந்த காவியம்' என்பதை மங்கையின் மூலமாக உணர்த்துகின்றார். இவ்வாறு ஆங்காங்கே தமிழ்ச் சமுதாயத்தை அழுகவைக்கும் மூடநம்பிக்கைகளைச் சாடுகின்றார். ஆண் பெண் உயர்வு தாழ்வு கூடாது, மக்கள் பொருளாதாரத்தில் சமநிலை பெறவேண்டும் என்ற கருத்துக்களைக் கதைப் போக்கிலே வைத்து ஊட்டுகின்றார். மன்னிக்கும் குணம் தலைவன் தலைவியிடம் ஏற்பட்டாலல்லாது குடும்ப வாழ்க்கை வளம் பெறாது என்பதைத் திறம்பெறத் தீட்டிக் காட்டுகின்றார். இதன்மூலம் ஆசிரியரை நன்றாக அறிகின்றோம். தமிழ் மணம் கமழ, தமிழ் நெஞ்சம் தோய அமைந்துள்ள இப்புதுப் பெருங்கதை படிப்போர்க்குப் பயனளிக்கும் திறத்தது. மணமக்களுக்குப் பரிசாகும் தகையது.

ஈரோட்டுப் பாதை

ஆசிரியர்: மா. இளஞ்செழியன், பி.ஏ. (ஆனர்ஸ்).

பக்கம் 36-விலை அணா எட்டு. வெளியிடுமிடம்: பகுத்தறிவுப் பாசறை, சென்னை-1.

தமிழகத்தின் மறுமலர்ச்சிக்கு அடிப்படையான தன்மான இயக்கத்தின் படிப்படியான வளர்ச்சியையும்—அதன் புதுப் புது திட்டங்களையும்—அவற்றைப் பரப்புவதில் ஏற்பட்ட துன்பங்களையும்—அடைந்த வெற்றிகளையும்-பெற்ற உணர்ச்சியையும், இன்றுள்ள குறிக்கோளையும், எழுச்சியூட்டும் நடையில் எழுதியுள்ளார். இவ்வுண்மைகளை இளைஞர்கள் அறிந்துகொள்வது அவசியம்.

நாஸ்திகர் யார் ?

ஆசிரியர் : கா. அப்பாதுரைப் பிள்ளை, எம்.ஏ, எல்.டி,.

பக்கம் 32—விலை அணா ஆறு. வெளியிடுமிடம்: முத்தமிழ் நிலையம், சென்னை 1.

'நாஸ்திகர்' என்று கேட்டாலே நடுங்கும் மக்களுக்கும், 'ஆஸ்திகம்' என்ற திரை மறைவில் நடைபெறும் அட்டூ

ழியங்களைப் புரிந்துகொள்ளாத மக்களுக்கும், உண்மை விளக்கந்தருவது இந்நூல். இனிய எளிய தமிழ் நடையில் வரையப்பட்டுள்ளது.

உலக அறிவியல் நூல்

ஆசிரியர்: நா. சி. கந்தையாபிள்ளை

பக்கம் 48 — விலை அணு 8.

இந்நூல் ஒரு சிறு கலைக் களஞ்சியம். பலபொருள்களைக் குறித்தும்—குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. பாமர மக்களும் உலக அறிவு பெற இந்நூல் துணை செய்கிறது.

வ. உ. சியின் வீரகர்ஜனை

ஆசிரியர்: கி. பிச்சமூர்த்தி

பக்கம் 54—விலை அணு 12.

வெளியீடுமிடம்: சமதர்ம நிலையம், குளித்தலை, திருச்சி ஜில்லா.

தமிழர் தலைவர், வ. உ. சிதம்பரனின், செந்தமிழ்ப் பற்றும், தன்னலம் மறந்த நாட்டுத் தொண்டும், இன்றைய மக்கள் உணரவேண்டும் என்ற விருப்பத்தோடு நல்ல தமிழ் நடையில் வரையப்பட்டுள்ளது. 'தமிழ் நாடு தமிழருக்கே' என்ற முழக்கம் 'வீரகர்ஜனை'யாகத் திகழ்கின்றது.

கார்ல் மார்க்ஸ்

ஆசிரியர் எஸ் சதாசிவம்.

பக்கம் 70—விலை ரூபாய் 1.

வெளியிடுமிடம் —இன்ப வாழ்வுப் பதிப்பகம், ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்.

'கார்ல் மார்க்ஸ்' அவர்களுடைய வாழ்க்கையை நிலைக்களனாகக் கொண்டு—புரட்சிக் கருத்துக்களை— விளக்குவதோடு, நம் நாட்டு மக்களுடைய மனதிலே உள்ள இருளைப் போக்கவும் முயற்சித்துள்ளார். 'கார்ல் மார்க்ஸைப்' படித்தும் இந்நாட்டு நிலையைக் காண வேண்டிய நேரத்தில் கண்மூடிக் கொள்பவர்களுக்கு இந்நூல் மிகவும் பயன்படும்.

காமாந்தகாரக் கடவுள்கள்

ஆசிரியர்: பி. என். இராமனுஜம்

பக்கம் 42—விலை அணு எட்டு.

வெளியிடுமிடம் :—ஆராய்ச்சி பதிப்பகம், பொள்ளாச்சி.

கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போகாமல் நிலைக்கக் காரணமாயுள்ள புராணக் குப்பைகளில் உள்ள ஊழல்களை—கடவுளரின் கயமைகளை வெட்ட வெளியாக்குகிறது இந்நூல்.

கவிதை மலர்கள்

ஆசிரியர்: ந. பழனிவேல்.

பக்கம் 56—விலை ரூபா $1\frac{1}{4}$.

விற்பனையாளர் :—தமிழ் முரசு பிராஞ்சு நிலையம், 581 பைகிராப்ட் ரோடு, சென்னை 5.

புரட்சிக்கவிஞரின் வாழ்த்துக் கவிதையோடு கவிதைகள் அமைந்துள்ளன. தமிழ் மக்கள் அனைவரது உள்ளத்துக்கும் விருந்தளிக்கும் தன்மையது.

'பாரதிதாசன்' அவர்களது கவிதைப் போக்கைப் பின் பற்றும முறை சிறப்புடையது.

மலர்—தோற்றத்தாலும் தன்மையாலும் மணமுள்ள மலராகவே திகழ்கின்றது.

'மன்றம்' (மாத வெளியீடு)

ஆசிரியர்:

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.,

பக்கம் 80-விலை அணா எட்டு.

வெளியிடுமிடம்: 30-79, செம்புதாஸ் தெரு, சென்னை-1.

மன்றம்-மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய பல புதுக் கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகளோடும், உணர்ச்சி யூட்டும் வரலாற்றுப் பகுதிகளோடும், சிந்தனையைத் தூண்டும் சிறுகதைகளோடும், நல்ல தமிழில் சிறந்த முறையில் வெளியிடப்பட்டுள்ளது. மக்கள் மன்றமாகவே திகழுகின்றது.

'முரசொலி' (வார வெளியீடு)

ஆசிரியர்: மு. கருணாநிதி.

பக்கம் 8-விலை அணா ஒன்று.

வெளியிடுமிடம்: 'முரசொலி' திருவாரூர்.

திராவிடர் இயக்கத்திற்கென தொண்டாற்றவும், தன்மானக் கொள்கைகளை நாட்டிலே பரப்பவும், திராவிட மக்களை எழுச்சியுறச் செய்யவும் 'முரசொலி' தோன்றியுள்ளது.

'போர்முரசு' (வார இதழ்)

ஆசிரியர்: எம். கே. அண்ணாமலை.

பக்கம் 12-விலை அணா ஒன்றரை

திராவிடத் தியாகி, தியாகராயர் திரு உருவத்தைத்தாங்கி, திராவிடத் திருநாட்டை மீட்கும் பணியில் திராவிட இனத்திற்கு உணர்ச்சியூட்ட 'போர் முரசு' முழங்குகின்றது.

'தனி அரசு' (மாதவெளியீடு)

ஆசிரியர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

பக்கம் 44-விலை அணா நான்கு.

வெளியிடுமிடம்: 'தனி அரசு' விருதுநகர்.

நம்நாட்டு மக்களின் 'இல்லாமை' ஒழிய, சுயமரியாதை வளர, பகுத்தறிவு சிறக்க, 'தனி அரசு' மலர்ந்துள்ளது.

'கரும்பு' (மாத வெளியீடு)

ஆசிரியர்: ந. மெ. தியாகராசன்.

பக்கம் 64-விலை அணா ஆறு.

வெளியிடுமிடம்: கரும்பு பதிப்பகம், புதுக்கோட்டை.

கரும்பு-மூவர்ண முகப்புடனும், தமிழ்ச்சுவை பொருந்திய கதை, கவிதை, கட்டுரைகளுடனும் வெளிவந்துள்ளது.

'வணிக ஜோதி'

(மாத மிருமுறை வெளியீடு)

ஆசிரியர்: எம். எஸ். மணியம் செட்டியார்.

பக்கம் 68-விலை அணா நான்கு

வெளியிடுமிடம்: 1, மலைபெருமாள் தெரு, சென்னை 1.

வணிக மரபினருக்கென-கருடக் கொடி முகப்புடனும் பல கட்டுரைகளோடும் வெளிவந்துள்ளது.

'நவீனம்' (மாத வெளியீடு)

ஆசிரியர்: வி. ச. தி. சாமி.

பக்கம் 40-விலை அணு நான்கு. வெளியிடுமிடம்: 'நவீனம்' சென்னை 7.

சிறப்புக் குறிப்புக்களுடனும், நாகை. பாலசுப்பிரமணியம் தீட்டிய 'அமராவதி இளவரசன்' என்ற தொடர்கதையுடனும் வெளிவந்துள்ளது. தொடர்கதையையே முக்கியமாகக் கொண்டுள்ளது சிறப்பாகும்.

'மூவிடோ நியூஸ்'

ஆசிரியர்: *T. D.* சிவபுண்ணியம்.

பக்கம் 44—விலை அணு ஆறு.

வெளியிடுமிடம்:—15. A. மலைக்கோட்டை கிழக்கு, தெப்பக்குளம், திருச்சி.

சினிமா, நாடகம் முதலிய கலைத்துறைகளைப் பற்றிய பல விவரங்களையும் உண்மைகளையும் விளக்கக்கட்டுரைகளையும் தாங்கி வெளிவந்துள்ளது இம்மலர்.

'போர்வாள்'

(பொங்கல் மலர்)

ஆசிரியர்: காஞ்சி. மணிமொழியார்

பக்கம் 60—விலை அணு எட்டு. வெளியிடுமிடம்:— 147, பவழக்காரத்தெரு, சென்னை-1.

போர்வாள் மலர், பெரியார், அறிஞர், கவிஞர் ஆகியோரின் உருவங்களோடும், கருத்துக்களோடும், மு. வரதராசனார், முருகு சுப்பிரமணியம், டி. கே. சீனிவாசன், இராதாமணாளன், குருசாமி, குஞ்சிதம் முதலியோரின் கட்டுரைகளோடும், கவிதைகளோடும், கொள்கை மணங்கமழ வெளி வந்துள்ளது.

பொங்கல் மலர்கள்

பொன்னி,
நிலவு,
திராவிடன்,
திராவிடமணி,
தமிழ்க்கலை

ஆகியவற்றின் பொங்கல் மலர்கள் வரப்பெற்றோம்.

சிறந்தமுறையில் வெளியிடப்பட்டிருந்தன. முயற்சி பாராட்டுக்குரியது.

●

Edited and Published by K. Anbazhagan M. A., at 10, Vellala St., Purasapakkam, Madras-7
rinted by K. V. T. Srinivasan at Sree Ranga Press, 1, Raja Hanumanthalala St. Madras-5.